Des: Deltota Harees

AHARAM
அகரம்

தரம் 5 - 11 வரை
எண்: 07 எழுத்து: 09 செப்டம்பர் 2013
www.aharam.lk

முன்வாருங்கள்

அரபா கரீம்

12 SEP 2013

விவேகமுள்ள எறும்புகள்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை 40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் விஞ்ஞானிகளது
கண்டுபிடிப்புகள் சில

பரசூட் :

- றைட் சகோதரர்களுக்கு பல்லாயிரம் வருடங்களுக்கு முன் அப்பாஸ் இப்னு பிர்னாஸ் என்ற பொறியியலாளர் பறக்கும் கருவியை கண்டுபிடிக்க முயற்சி செய்தார்.
- கி.பி. 875இல் பட்டினாலான விசித்திரமான ஒரு கருவியின் மூலம் 10 நிமிடங்கள் வானில் பறந்து காட்டினார்.
- இவரது ஞாபகமாக பக்தாத் விமான நிலையம் இப்னு பிர்னாஸ் விமான நிலையம் என பெயரிடப்பட்டது
- இக் கண்டுபிடிப்பு பரசூட் கண்டுபிடிப்புக்கு அடிப்படையாக அமைந்தது.



அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள்:

- 10ஆம் நூற்றாண்டில் அறுவை சிகிச்சை நிபுணர் அல் ஸஹ்ராவி என்பவரால் நவீன அறுவை சிகிச்சை உபகரணங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டன.
- அறுவை சிகிச்சையில் தையல் போடும் முறையை இவரே அறிமுகப்படுத்தியதுடன் இவரது அல்தஸ்ரிப் எனும் மருத்துவக் கலைக்களஞ்சியம் பிரபலமானதாகும்.
- அலி இப்னு சீனாவும் இத்துறையில் குறிப்பிடத்தக்க அளவு பங்காற்றிய ஒரு மகத்தான மருத்துவராவார். இவரது நூலாகிய கானூன் அத்திப் பல நூற்றாண்டுகள் ஐரோப்பாவின் பாடநூலாக காணப்பட்டது.

கோப்பி:

- கோப்பி காலித் என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அவர் தனது ஆடுகள் ஒருவகை விதையை உட்கொண்டு உற்சாகமடைவதை கண்டு அதனை ஆய்வு செய்து இந்த கோப்பியை உலகுக்கு அறிமுகம் செய்தார்.
- 14ம் நூற்றாண்டில் அரபிகள் இதனை பயிரிட்டுள்ளதுடன் கஹ்வா என்ற அரபு சொல்லிருந்தே Coffee என்ற சொல் பெறப்பட்டுள்ளது.

ஊசித் துளை கெமரா

- முஸ்லிம் இயல்பியல் வல்லுனர் இப்னு அல் ஹாத்திம் என்பவரே ஊசித் துளை கெமராவை கண்டுபிடித்தவராவார்.
- இது 10ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இவர் Book of Optics எனும் நூலையும் எழுதியுள்ளார்.
- இதுவே நவீன கெமராக்கள் தோன்றுவதற்கு முன்னோடியாக அமைந்தது.

செம்போ (Shampoo)

- ஆரம்பத்தில் எகிப்தியரும், ரோமர்களும் தமது தலையை துப்புரவாக வைத்திருக்க ஒருவகை சவர்க்காரத்தை ஒத்த பொருளை பயன்படுத்தினர்.
- பின் அரேபியர்கள் மரக்கறி எண்ணெய் மற்றும் வாசனைப் பொருட்களைப் பயன்படுத்தி சம்போ தோன்றுவதற்கு முன்னோடியாக அமைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 07 செப்டம்பர், 2013 எழுத்து: 09

12 SEP 2013

அகரம்

உள்ளே...

06

முன்வாருங்கள் 21

15

தீர்வு என்ன? 28

உண்மையான செல்வம் 13

14

09

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

பாடத்திட்டம்

கணிதம்	30	தமிழ்	26
விஞ்ஞானம்	33	புலமைப் பரிசில்	37

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
www.aharam.lk
E-Mail: *editor@aharam.lk*

சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

நல்லதோர் வீணை செய்தே அதைப் புழுதியில் எறிவதுண்டோ!

அல்லாஹுத் தஆலாவின் தீனை நிலை நாட்ட இந்தப் பூமிக்கு வந்திருக்கும் அவனது பிரதிநிதிகளே, மாணவச் செல்வங்களே,

இறைதூதர் அவர்களிடம் மாதத்தை ஆரம்பிப்பது பற்றி வினவப்பட்டபோது அவர்கள் இவ்வாறு சொன்னார்கள் "நாங்கள் உம்மிகள். எழுதவும் மாட்டோம், கணிக்கவும் மாட்டோம். மாதம் என்பது 29 நாட்கள் அல்லது 30 நாட்கள்." (ஸஹீஹ் புகாரி) இந்நபிமொழி தற்காலத்தில் பலராலும் பயன் படுத்தப்படுகின்றது.

இங்கு வெறுமனே எழுதவும் கணிக்கவும் மாட்டோம் என இறைதூதர் அவர்கள் கூறவில்லை. மாறாக நாங்கள் உம்மிகளாக (படிப்பறிவு அற்றவர்களாக) இருக்கின்றோம், அதன் காரணமாகவே நாம் எழுதவும் கணிக்கவும் மாட்டோம் என்று காரணத்தையும் சேர்த்தே கூறியிருக்கின்றார்கள்.

வஹியுடைய அறிவில் இறைதூதர் உம்மியாக இருந்திருக்க முடியாதல்லவா? அங்குதானே அது ஊற்றெடுக்கின்றது. ஆதலால் நாங்கள் உம்மிகள் என்று இறைதூதர் அன்று சொன்னது வஹியுடைய அறிவு பற்றி அல்ல என்பது வெள்ளிடை மலை. அது பௌதீகத்தின் அறிவு பற்றியே.

இந்நபி மொழியைக் கொண்டு வஹியைச் சுமந்த சமூகம் எப்போதும் உம்மிகளாகவே இருப்பதனையே நபிகளார் விரும்பினார்கள் என்றோ அல்லது அதனையே ஏவினார்கள் என்றோ அர்த்தம் கொள்ள முடியாது. அன்று உம்மிகளாக இருந்த நிலையை மாற்றுவதற்கு நபிகளார் பிரயத்தனப்பட்டார்கள். அதனால்தான் பத்ரின் கைதிகளை மதீனத்துப் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்துவிட்டு விடுதலை பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அறிவைக் கற்றுக் கொள்ளுதல் முஸ்லிமான ஆண், பெண் மீது பர்ழ் என்று இறைதூதர் அவர்கள் சொன்னதும் உம்மி எனும் நிலை மாறவேண்டும் என்பதற்காகத்தானே.

அல்குர்ஆனோ தனது முதலாவது வெளிப்பட்டிலேயே அறிவைப் பற்றிப் பேசுகின்றது. அங்கே எழுதுகோலைக் கொண்டு கற்கும் பௌதீக அறிவையும், மனிதனின் அறிவு ஞானத்திற்கு அகப்படாத வஹியுடைய அறிவையையும் இணைத்தே கற்குமாறு அல்லாஹ் ஏவுகின்றான்.

வானங்கள் பூமியின் படைப்பில் அறிவுடையோருக்கு அத்தாட்சிகள் இருப்பதாகக் கூறும் அல்லாஹ் அந்த அறிவுடையோர்தான் அல்லாஹ்வை அதிகம் துதிசெய்பவர்கள் என ஸூறா ஆலஇம்றானின் 189வது வசனத்திலே கூறுகின்றான். ஆனால், படைப்புக்களில் அல்லாஹ்வின் ஏற்பாடுகள் பற்றிய, அவற்றின் பௌதீக விதிகள் பற்றிய இல்ம் ஐ ஷரீஆவுடைய அறிவு என இன்றைய "ஆலிம்கள்" ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. இன்று ஷரீஆவின் பரிபாஷையில் இல்ம் - அறிவு.என்பதன் அர்த்தம் அரபுக் கலாசாலைகளின் போதனைகளுக்கு மாத்திரம் எல்லைப்படுத்தப் பட்டதாகத் தெரிகின்றது.

நாங்கள் உம்மிகள் என்று அன்று சொன்னதற்கு கடந்த பதிநான்கு நூற்றாண்டுகளுக்கும் இன்னும் பலநூறு ஆண்டுகளுக்கும் இந்த உம்மத் உம்மிகளாகவே இருக்க வேண்டும் என்பதுதான் அர்த்தமா? அறிவைத் தேடிப் புறப்படும் ஒருவன் திரும்பி வரும்வரை அல்லாஹ்வின் பாதையிலே இருக்கின்றான் என்று நபிகளாரும், புவியிலே பரந்து சென்று அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப் பாருங்கள் என அல்குர்ஆனும் சொன்னது எதனை? அல்லாஹ்வும் அவனது தூதரும் இவ்வாறு கடின உழைப்போடு வெறும் முசுப்பாத்திக்காகவா அறிவை தேடச் சொன்னார்கள். தேடிப்பெற்ற அறிவை தெருவிலே விட்டெறிந்துவிட்டு மௌட்டீகத்தில் உழல்வதா அல்லது அல்லாஹ்வின் பிரதிநிதியாக அவனது தீனை நிலைநாட்ட அதனைப் பயன்படுத்துவதா?

மாணவச் செல்வங்களே, புறப்படுங்கள். இந்த சமூகம் உங்களுக்கான வெற்றிடங்களோடு காத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

சனிக்கிழமை வாசிகள் அல்லாஹ்வின் கட்டளையை மீறியதால் அவனது சாபம் அவர்கள் மீது விதியாகியது. அல்லாஹ் தடுத்த ஒன்றை தமது தந்திரத்தால் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டனர். அல்லாஹ்வின் சட்டத்தில் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ தந்திரத்தைப் பயன்படுத்துவது மிக மோசமான இழிசெயலாகும்.

அஸ்ஹாபுஸ் ஸப்த்

சனிக்கிழமை வாசிகள்

இவர்கள் செய்த பாவத்தின் காரணமாக நல்லோர்கள் இரண்டு சாரார்களாயினர்.

ஒரு சாரார் பாவத்தைச் செய்தவர்களை எச்சரிக்கை செய்து நல்வழிப்படுத்த முயற்சித்தவர்கள்.

மறுசாரார் "ஏன் நீங்கள் அச்சமுதாயத்தினருக்கு உபதேசிக்கிறீர்கள்? அல்லாஹ் அவர்களை அழிப்பான் அல்லது கடும் வேதனையால் தண்டிப்பான்" என்று கூறி தீமையைத் தடுக்க முனைந்தவர்களை எச்சரித்தவர்கள். "ஏன் நீங்கள் இதனை அலட்ட வேண்டும். அல்லாஹ் அதனைப் பார்த்துக் கொள்ளட்டும்" என தமது பொறுப்பான நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணியை புறக்கணித்தனர்.

அதிகாலை புலர்கிறது. அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தின் கதவுகள் திறக்கப்படவில்லை. சூரியன் உச்சி வானை நோக்கிச் செல்கிறது. வெயிலும் கடுமையாகிறது. இன்னும் அவர்கள் கதவுகளைத் திறந்து கொண்டு வெளிவரவில்லை. இறை தண்டனையிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் இவர்களுக்கு என்ன நேர்ந்துள்ளது என்பதை அவதானிக்க ஒருவரை அனுப்பி அவர்களது கதவுகளை திறந்து விடுகின்றனர்.

கைசேதம்! அவர்கள் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றப்பட்டிருந்தனர். அல்லாஹ்வின் தண்டனைக்குள்ளானவர்கள் தமது உறவினர்களை அடையாளம் கண்டனர். ஆனால் அவர்களை எவரும் அடையாளம் காணவில்லை.

மக்களோ அவர்களை விட்டும் ஒதுங்கிச் சென்றனர். அப்போது அவர்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்தவர்கள் அவர்களைப் பார்த்து, "நாங்கள் உங்களை எசசரித்தோம் அல்லவா?" எனக் கேட்டனர்.

அதற்கு அக்குரங்குகள் "ஆம் தடுத்தீர்கள்" என தமது தலையை அசைத்து தமது தவறை ஒத்துக்கொண்டன.

இச்செய்தியை அறிவித்த இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அழுதார்கள். காரணம் கேட்ட போது "நாம் ஏராளமான பாவங்களைக் காண்கிறோம். அவற்றை தடுப்பதுமில்லை. அது பற்றி எதுவும் சொல்வதுமில்லை" என்றார்கள்.

"மேலும் உங்களில் எவர்கள் – சனிக்கிழமை வரையறையை மீறினார்களோ அவர்களைப் பற்றி நீங்கள் நிச்சயம் அறிந்தே இருக்கிறீர்கள், அவர்களை நோக்கி "நீங்கள் குரங்குகளாகி இழிவடைந்தவர்களாகி விடுங்கள்" என்று நாம் கூறினோம். இவ்வாறு அவர்களின் இறுதி முடிவை அன்று வாழ்ந்தவர்களுக்கும் அவர்களுக்குப் பின்னர் வரக்கூடிய வழித்தோன்றல்களுக்கும் ஒரு படிப்பினையாகவும் இறையச்சமுடையோருக்கு நல்லுரையாகவும் ஆக்கினோம்."

(அல்பகரா: 65-66)

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: مَا نَقَصَتْ صَدَقَةٌ مِنْ مَالٍ وَمَا زَادَ اللَّهُ عَبْدًا بِعَفْوٍ إِلَّا عِزًّا وَمَا تَوَاضَعَ أَحَدٌ لِلَّهِ إِلَّا رَفَعَهُ اللَّهُ (رواه مسلم)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஸதகா ஒருவருடைய சொத்தில் குறைவை ஏற்படுத்த மாட்டாது. மன்னிப்பைக் கொண்டு அல்லாஹ் ஒருவரின் கண்ணியத்தை அதிகரிக்கின்றான். மேலும் ஒருவர் அல்லாஹ்வுக்காக பணிவாக நடந்து கொண்டால் அல்லாஹ் அவரைத் தரமுயர்த்தி விடுகின்றான்."
(ஸஹீஹ் முஸ்லிம்)

இஸ்லாம் கற்றுத் தருகின்ற பண்பாட்டுப் பாடங்களுள் பணிவு மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஒரு முஸ்லிம் அதிக கவனம் செலுத்தி தன்னிடம் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகளுள் ஒன்றாகக் காணப்படும் பணிவு தொடர்பாக இந்த ஹதீஸின் மூலம் நபியவர்கள் மக்களுக்கு ஆர்வமூட்டியுள்ளதைக் காண்கின்றோம்.

பணிவுக்குப் பகரமாக பெருமையை வளர்த்துக் கொண்டவர் இறைவனை மறந்துவிட்டவர் போலாகின்றார். எனவே, மனிதன் தன்னுள் உருவாகும் தற்பெருமையைத் தகர்த்தெறிந்து பணிவுடன் நடக்க வேண்டும் என்பதை பின்வரும் ஹதீஸ் குத்ஸியும் எமக்கு உணர்த்துகின்றது.

"கண்ணியம் எனது ஆடை, பெருமை எனது போர்வை. இவ் இரண்டில் ஒன்றை யார் தனக்குரியதென வாதாடுகிறாரோ, அவரை நிச்சயமாக நான் வேதனை செய்வேன்." (அபூதாவூத்)

பணிவு என்பது நற்பண்புடன் தொடர்பாது. அதன் இறுதி இலக்கு மனிதர்களுக்கு மத்தியில் நீதியோடும் எல்லை மீறாமலும் நடந்து கொள்வதாகும்.

"உங்களில் ஒருவர் அடுத்தவருக்கு எதிராக பெருமை கொள்ளாமலும் அத்து மீறாமலும் இருக்கின்ற அளவுக்கு நீங்கள் பணிவாக நடந்து கொள்ளுமாறு அல்லாஹ் வஹி அறிவித்துள்ளான்."
(முஸ்லிம்)

எமது பாடசாலைச் சூழலில் பலதரப்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதை நாம் காண்கின்றோம். அவர்கள் திறமையிலும் ஆற்றலிலும் பல்வேறு தரங்களில் காணப்படுவர். எனினும், திறமைகள் நிறைந்த நாம் மற்ற மாணவர்கள் விடயத்தில் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒரு மனிதனிடத்தில் அறிவு, ஆற்றல், பட்டம், பதவி என்பன உயர்ந்து செல்கின்ற போது அவனிடத்தில் தானாக பணிவு வளர்ந்து கொண்டே செல்ல வேண்டும். அப்போது அல்லாஹ் அவனை கண்ணியப்படுத்துகின்றான்.

யாருடைய உள்ளத்தில் இந்த பணிவு இல்லையோ அவர், அடுத்தவர்களை ஏளனம் செய்தும், அடுத்தவர்களை குறை கண்டும், அடுத்தவர்களின் குறைகளில் ஆதாயம் தேடும் பண்பும் கொண்டவராகக் காணப்படுவார்.

எம்மிடம் வந்து சென்ற புனித ரமழான் எம்மிடத்தில் எதிர்பார்க்கின்ற முக்கிய விடயமாக எமது உள்ளத்தில் இத்தகைய பணிவு உருவாக வேண்டும் என்பதுடன், இறையச்சமும் ஏற்பட வேண்டுமென்பதாகும்.

பணிவின்றி, பெருமையுடன் வாழ்பவர்கள் பற்றி நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"பணிவு இன்றி பெருமையுடன் திரியும் மக்கள் மறுமையில் தூசுகளின் சிறு பகுதிகளைப் போல் எழுப்பப்படுவார்கள். எல்லா இடங்களிலும் அவர்கள் அவமானத்துடனே நடத்தப்படுவார்கள்."
(திர்மிதி)

"எவருடைய உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை இருக்கின்றதோ அவர் சுவனம் நுழையமாட்டார்." (முஸ்லிம்)

(20ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஸ்லிம்களே! நற்செய்தி பெற்றுக் கொள்ளுங்கள். இதோ... அல்லாஹ்வின் தூதர் வந்து விட்டார்கள்."

உஹுத் களத்திலே நபியவர்கள் எதிரிகளால் சூழப்பட்டிருந்த போது எதிரிகளின் படையைப் பிளந்து கொண்டு வெளிவந்த நபியவர்களைக் கண்ட ஆனந்தத்தில் கஅப் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு அவ்வாறு சப்தமிட்டார்கள். நிலைமையை அவதானிக்காது, ஆபத்தை உணராது கஅப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இவ்வாறு சப்தமிட்டதை எதிரிகள் அறிந்துவிடக் கூடாது என்பதற்காக நபியவர்கள் அமைதியாக இருக்குமாறு சைகை காட்டினார்கள்.

விடுங்கள். அவன் என்னருகே வரட்டும்" என்றார்கள்.

எதிரி தாக்க வருகிறான். நபியவர்கள் எதிரியை வீரத்துடன் எதிர்கொள்ள தயாரானார்கள். அப்போதுதான் அவர்களின் நிகரற்ற வீரம் வெளிப்பட்டது.

அவன் நபியவர்களுக்கு அருகில் வந்ததும் ஹாரிஸ் இப்னு சிம்மாவிடமிருந்து ஒரு சிறிய ஈட்டியை நபியவர்கள் வாங்கி தனது உடலை சிலிர்த்தார்கள். எப்படி ஒட்டகம் சிலிர்க்கும்போது அதனுடைய உடலிலிருந்து முடி பறக்குமோ அதேபோல் மக்கள் நபியவர்களை விட்டுப் பறந்தார்கள். பிறகு நபியவர்கள் அவனது கழுத்தைக் குறிபார்த்து ஈட்டியை எய்தார்கள். அது அவனது கழுத்தில் உராய்ந்து சிறிய காயத்தை ஏற்படுத்தியது. சிறிய காயமானாலும்

வீரமும் விவேகமும்

கஅப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் சப்தம் கேட்டு முப்பது தோழர்கள் அவ்விடம் விரைந்தனர். தற்போது சிறிய தொகை தோழர்கள் வந்து சேர்ந்து விட்டார்கள் என்பதற்காக நபியவர்கள் எதிரிகளை எதிர்த்துப் போரிடவில்லை. மாறாக, இங்குதான் நபியவர்களின் விவேகம் வெளிப்பட்டது. அந்த சிறிய தொகையினருடன் மலைக்கணவாயின் மேல் ஏறலானார்கள்.

"யுத்தம் என்பது தந்திரமே" என நபியவர்கள் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, வெற்றி பெற விவேகமும் தந்திரமும் தேவை. எனவே, நபியவர்கள் தமது பாதுகாப்பை பலப்படுத்தவும் எதிரிகளை நெருங்கவிடாமல் தோற்கடிக்கவும் தந்திரத்தைக் கையாண்டார்கள். இதனையும் முறியடித்து யுத்தத்தை வெற்றி கொள்ளவே குறைஷிகள் முயன்றனர்.

"முஹம்மத் எங்கே? அவர் தப்பித்துக் கொண்டால் நான் தப்பிக்க முடியாது" என உபை இப்னு கலப் என்பவன் அலறியவனாக நபியவர்களைத் தேடி அலைந்தான். அப்போது நபியவர்கள் அவன் கண்ணில் படவே கொலைவெறியுடன் நபியவர்களை நோக்கி விரைந்தான்.

அப்போது நபித் தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருவர் அவனைத் தாக்கட்டுமா?" எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், "விட்டு

அதனால் ஏற்பட்ட வலி பொறுக்க முடியாமல் அவன் துடித்தான். ஒட்டகத்திலிருந்து கீழே விழுந்தான்.

அந்த சிறிய காயத்துடன் குறைஷிகளிடம் திரும்பி, "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! முஹம்மது என்னைக் கொன்று விட்டார்" என்று சப்தமிட்டான். அதற்கு குறைஷிகள், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நீ பயந்துவிட்டாய். அல்லாவின் மீது சத்தியமாக! உனக்கு ஏதோ நடந்துவிட்டது. இல்லையென்றால் இந்த சிறிய காயத்திற்குப்போய் இப்படி கூச்சல் போடுவாயா?" என்று கூறி நகைத்தார்கள். அதற்கு அவன், "முஹம்மது மக்காவில் இருக்கும் போதே நான் உன்னைக் கொல்வேன்! என்று கூறியிருந்தார். அல்லாவின் மீது சத்தியமாக! என்மீது அவர் துப்பியிருந்தாலும் நான் செத்திருப்பேன்" என்று கூறினான். "எனது உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! எனக்கு இருக்கும் வேதனையை இந்த தில்மஜாஸிலுள்ள அனைவருக்கும் பிரித்துக் கொடுத்தால் அவர்கள் அனைவரும் இறந்துவிடுவார்கள்" என்றான். மக்கா செல்லும் வழியில் ஸஃப் என்ற இடத்தில் இவன் இறந்தான்.

நபியவர்கள் வீரத்துடன் செயற்பட்ட அதே வேளை விவேகமாகவும் நடந்து கொண்டார்கள். எனவே, விவேகமான அணுகுமுறைகளே காலத்தின் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk



விவேகமுள்ள எறும்புகள்

ஒரு தடவை சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது படை பட்டாளத்துடன் பயணிக்கும்போது அங்கிருந்த சில எறும்புகள் பேசிக்கொண்ட செய்தியை அவர்கள் செவியுற்றார்கள் என்ற சம்பவத்தை பின்வரும் திருமறை வசனம் (27:16-19) பேசுவதனூடாக எறும்புகள் பற்றிய மாபெரும் அறிவியல் அற்புதம் ஒன்றை அல்குர்ஆன் முன்வைக்க முனைகின்றது.

எறும்புகள் பற்றியும் அவற்றின் செயற்பாடுகள், நுணுக்கங்கள் பற்றியும் பல ஆய்வுகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாய்வுகள் எறும்புகள் பற்றி நாம் அறியாத பல்வேறு அற்புதங்களையும் இறைவனின் வல்லமைகளையும் தெளிவுபடுத்துகின்றன. எறும்புகள் பற்றிய விஷேட கற்கைக்கு Myrmecology எனப் பெயர் வழங்கப்படுகின்றது.

எறும்புகளின் உடலமைப்பு



ஏனைய பூச்சிகளைப் போலவே எறும்புகளும், உடலுக்கு வெளியேயான எலும்புக் கூட்டையும் (External Skeleton), மூன்று சோடி கால்களையும், துண்டுகளான உடலையும் (Segmented body), தலைப் பகுதியில் எண்ணற்ற நுண்ணிய வில்லைகளால் ஆக்கப்பட்ட இரு பக்கக் கூட்டுக் கண்களையும் (Compound eyes), தலையின் முன்பகுதியில் இரு உணர் கொம்புகளையும் (Antennae) கொண்டிருக்கும். எறும்புகள் தமது உடல் எடையை விடவும் 50 மடங்கு சுமையினை சுமக்கும் வல்லமையைக் கொண்டுள்ளன.

அற்புதமான உணர்கொம்புகள்

நாம் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதோ அல்லது நாம் கவனிக்காமலோ ஒரு சில உணவுத் துகள்கள் கீழே சிந்திவிட்டால், சிறிது நேரத்தில் அங்கு ஒரு எறும்புக் கூட்டமே வந்து சேர்ந்து விடுவதைப் பார்த்திருக்கலாம். இது எப்படி நடக்கிறது, இதன் பின்னணியில் உள்ள மர்மம் என்ன என்று சிந்தித்திருக்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறும்புகளுக்குக் கண்கள் தெளிவாகத் தெரியாது. ஆனால் மோப்ப உணர்வு அதிகம். இது ஓரிடத்தில் உணவு இருப் பதைப் பார்க்கும் முதல் எறும்பு, அதன் அருகே சென்று தன் தலையில் உள்ள உணர்கொம்பினால் அதைத் தொட்டுப் பார்க்கிறது. அதன் பிறகு அங்கிருந்து திரும்பிச் செல்லும் போது உடலின் பின் பகுதியிலிருந்து 'ஃபெரமோன்' என்ற வேதிப்பொருளைத் தரையில் கோடு போல் இட்டுக்கொண்டே செல்கிறது. இந்தக் கோடு அதன் புற்று வரை நீண்டு செல்லும். இதை மோப்பம் பிடிக்கும் மற்ற எறும்புகளும் அந்தத் தடத்தைப் பின்பற்றி உணவு இருக்கும் இடத்தை விரைவாகச் சென்றடைந்து விடுகின்றன. பின்பு அவ்வுணவுகளை புற்றை நோக்கி வரிசையாக மிக சுறுசுறுப்பாக எடுத்துச் செல்கின்றன.

எறும்புகளின் வாழ்க்கை முறை

எறும்புகள் உலகின் எல்லாப் பகுதிக ளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. அண்மையில் இது பற்றி ஆய்வு செய்த அறிவியலாளர்கள் உலகில் 11,880 வகை யான எறும்பினங்கள் உள்ளதாகக் கண்டு பிடித்துள்ளனர். அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் இவை 90,00க்கும் அதிக இனத் தைக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார். இவ்விலங்குகளில் பெரும்பாலானவை வெப்பமுள்ள நாடுகளில்தான் வாழ்கின் றன. பொதுவாக பனிப் பிரதேசங்கள் தவிர்ந்த மற்ற அனைத்துப் பகுதிகளிலும் எறும்புகள் வாழ்கின்றன.

குழுவாக வாழும் அற்புதம்



எறும்புகள் குழுவாக வாழும் பூச்சியினமாகும். தேனீ, குளவி, கறையான் என்பன போன்றே எறும்புகளும் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. இவற்றின் கூட்டமைப்பும் ஒற்று மையும் மனிதர்களை விடவும் அற்புதமாக நடைபெறுகின் றன.

ஒவ்வொரு குழுவிலும் பொதுவாக ஒன்று அல்லது ஒரு சில இனம்பெருக்கும் திறன் கொண்ட அரசி (Queen) எனும் பெண் எறும்புகளும் இனம்பெருக்கும் திறன் கொண்ட சில சோம்பேறிகள் (Drones) எனும் ஆண் எறும்புகளும் இருக் கின்றன. இவை அல்லாது இனம்பெருக்கும் திறனற்ற பெரும் எண்ணிக்கையிலான வேலையாட்கள் (Workers), போரா ளிகள் (Soldiers) என ஆண், பெண் எறும்புகளும் வாழ் கின்றன. இவை தமது பணிகளைத் திட்டமிட்டு நிர்வகிக் கின்றன. மேலாளர்கள் (Managers), மேற்பார்வையாளர்கள் (Supervisors), தொழிலாளர்களை மேலாண்மை செய்பவர்கள் (Foremen) உழைப்பாளர்கள் (Workers) என்று தனித்தனி யாக தமது வேலைகளை துறைகளாக (Departments) வகுத்துச் செயலாற்றுகின்றன.

இனம்பெருக்கும் திறனற்ற ஆண், பெண் எறும்புகளே எப்போதும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப் பனவாகும். அரசியும், அரச எறும்புகளும் தமக்கென உள்ள புற்றின் அறைகளில் இருந்துகொண்டு இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு சந்ததியைப் பெருக்குவதில் மட்டும் பங்கெடுத்துக் கொண்டிருக்கும்.

இவற்றின் இனப்பெருக்க எண்ணிக்கைக்கு ஏற்ற விதத் திலேயே அவற்றின் ஆயுளும் அமைந்துள்ளன. அதிகபட் சமாக இராணி எறும்பும், ஆண் ராஜா எறும்பும் 30 வருடம் வரை உயிர் வாழ்கின்றன. வேலையாட்களும், காவலாளி களும் சில மாதங்கள் முதல் மூன்று வருடம் வரை உயிர் வாழ்கின்றன. பூச்சி இனங்களில் மிகவும் அதிக காலம் உயிர் வாழக்கூடிய இனமாக இராணி எறும்பு உள்ளது குறிப்பி டத்தக்கது.

எறும்புப் புற்றின் அதிசயம்

தரைக்கு மேலாக பார்ப்பதற்கு சிறு புற்றாக எறும்புகளின் புற்றுகள் இருப்பினும் அவற்றின் ஆழமும் அகலமும் மிகவும் விசாலமானவை. ஒரு மனிதனையே தாழ்த்தக்கூடிய ஆழத் திற்கு அவற்றின் புற்று இருக்கும். அதில் பல்வேறு அறைகள் காணப்படுகின்றன. இராணிக்குரிய அறை, களஞ்சிய அறை, முட்டைகளுக்கென தனியறை, கூட்டுப் புழுக்களுக்கென வேறு அறை என பல நூறு அறைகள் இருக்கும். புற்றைப் பராமரிக்கும் எறும்புகள் தொடர்ந்தும் புற்றை விசாலப் படுத்தி பாதுகாக்கும் பணியைச் செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எறும்புகள் நோய்க் கிருமிகளைத் தடுக்க ஒரு வகை திராவகம் போன்ற திரவப் பொருளை உற்பத்திச் செய்கின்றன. இந்த திரவப் பொருளை தங்களின் உடலில் பரவச் செய்வதுடன் தமது புற்றுகளின் சுவர்களிலும் தடவுகின்றன. புற்றின் ஒவ்வொரு அறைக்கும் காற்று செல்வதற்கான ஏற்பாட்டையும் செய்கின்றன.

எறும்புகளின் புற்றின் முகப்பில் சில காவலாளி எறும்புகள் இருக்கின்றன. அங்கே வரும் ஒவ்வொரு எறும்பையும் அவை முகர்ந்து பார்த்துவிட்டு, அது தமது குழுவைச் சார்ந்தனவா என்று உறுதி செய்த பிறகே, உள்ளே செல்ல அனுமதிக்கின்றன. எறும்புகள் வரிசையாக நகர்ந்து செல்லும் போதும் தமது உணர்கொம்பை மற்றொரு எறும்பின் தலையில் வைத்து, தங்கள் கூட்டத்தைச் சேர்ந்ததுதானா என்று பரிசோதிப்பதையும் நீங்கள் பார்த்திருக்கலாம்.

மனித வாழ்வோடு நெருங்கிய எறும்புகளின் வாழ்வு



விலங்குகள், பூச்சிகள் ஆகியவற்றின் வாழ்க்கை முறைகளை ஆய்வு செய்தோர் எறும்புகளின் வாழ்கைப் போக்கு மனிதனின் வாழ்க்கைப் போக்கோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது எனக் கண்டுபிடித்துள்ளனர். மனிதர்களைப் போன்றே எறும்புகள் இறந்த உடல்களை மண்ணில் புதைத்து விடுகின்றன. நிர்வாகங்களைத் திட்டமிட்டு மேற்கொள்கின்றன. அவ்வப்போது ஒன்று கூடி தங்களிடையே அளவளாவிக் (Chatting) கொள்கின்றன. தங்களுக்கிடையே மிகவும் நுட்பமான முறையில் தகவல் பரிமாற்றங்கள் செய்கின்றன. வெயில் காலத்தில் மழை காலத்திற்குரிய நீண்ட நாள் தேவைக்கான தானிய மணிகளை சேமித்து வைக்கின்றன. தானிய மணிகள் முளைவிட்டு வளரும் போது அவற்றின் அடிவேர்களை அறுத்துவிடுகின்றன. அவ்வாறு அறுக்காது விட்டு விடின் அவை அழுகிப்போகும் என்பதைத் தெரிந்து வைத்துள்ளன.

சேமித்து வைத்திருக்கும் தானியக் களஞ்சியம் மாரி காலத்தில் ஈரப்பசை மிக்கதாய் மாறிவிடும் போது, அவற்றை வெளியே கொண்டு வந்து சூரிய ஒளியில் காயவைக்கின்றன. அவை சூரிய ஒளியில் காய்ந்ததும் உடனே உள்ளே கொண்டு சென்று களஞ்சிய சாலையில் பாதுகாக்கின்றன. ஈரப்பசையால் வேர்விட்டு அழுகிப்போய்விடும் என்ற வேளாண்மை அறிவைப் பெற்றிருப்பது விந்தையிலும் விந்தையல்லவா?

அந்நம்ல் - எறும்பு என்ற பெயரில் அல்லாஹ் ஒரு அத்தியாயத்தையே இறக்கி, எறும்பு பற்றி ஒரு சம்பவத்தையும் அதில் எறும்புகளும் பேசுகின்றன, அவற்றுக்கென்றும் ஒரு மொழி உள்ளது என்றும் பல வியத்தகு செய்திகளைக் கூறுகின்றான். நபியவர்களதும் சஹாபாக்களதும் வாழ்விலும் எறும்புடன் தொடர்புபட்ட பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளதை நாம் அறிகின்றோம். இவ்வாறு சிறு படைப்புகள் மூலமும் பல படிப்பினைகளைப் புகட்டும் அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அல்ஹம்துலில்லாஹ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் களஞ்சியம்

- ‘பிஸ்மி’ இருமுறை வந்திருக்கும் ஸீரா – **ஸீரா நம்ல்**
- நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகன் – **கன் ஆன்**
- கதீஜா நாயகி அவர்களின் தந்தை – **குவைலித்**
- பைத்துல் முகத்தஸிற்கு அத்திவாரம் இட்டவர் – **தாவூத் (அலைஹிஸ்ஸலாம்)**
- ஹஸ்ரத் பிலால் (ரழி) அவர்களை அடிமைத் தனத்திலிருந்து மீட்டெடுத்தவர் – **அபூபக்கர் (ரழி)**
- அல்லாஹ்வால் முதன் முதலில் படைக்கப்பட்ட பொருள் – **எழுதுகோல்**
- ஏழைகளின் தாய் எனப்படுபவர் – **ஸைனப் (ரழி)**
- உமர் (ரழி) அவர்களின் மகள் – **ஹப்ஸா**

பஸ்ரா லிஸான்
தரம்: 10
நளீம் ஹாஜியார் ம.க

உங்களுக்குத் தெரியுமா?

- சூரியன் உதிக்கும் நாடு? **ஜப்பான்**
- வாழ்நாளில் தூங்காதது? **எறும்பு**
- பெரிய பாலைவனம்? **சஹாரா**
- யாருடைய மூளை தங்கப் பேணியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது? **அல்பர்ட் ஐன்ஸ்டைன்**
- இலங்கையின் முதலாவது அரசி? **அனுலா தேவி**
- ஆங்கிலம் தெரியாத இங்கிலாந்து முதல் மன்னன்? **ஜோர்ஜ் மன்னன்**
- நுளம்பு இல்லாத நாடு? **பிரான்ஸ்**
- மீனில்லாத நாடு? **ஜோர்தான்**
- மதம் இல்லாத நாடு? **அல்பேனியா**

பாத்திமா ஸப்ரா முஹம்மத்
கா/ஸாஹிரா தேசிய பாடசாலை,
கிந்தோட்டை

மனித விலங்கு

- மனித உடம்பில் ஓடும் இரத்த வகைகள் எவை? A,B,AB,O
- ஆரோக்கியமான மனிதனின் உடலின் வெப்பநிலை யாது? 36.7° செல்சியஸ்(C) 98.4° பரனைட்(F)
- மனித இருதயத்தின் எடை? 220-260g
- மனித உடலில் இரத்தம் பாயாத ஒரே ஓர் இடம்? கருவிழிகள்
- கருவறையில் உள்ள சிசு சுவாசிக்குமா? சுவாசிக்காது
- மனிதன் சுவாசிக்கும் வாயு எது? ஒட்சிசன்
- கருவறையில் உள்ள சிசுவுக்கு உயிர் உண்டா? ஆம்
- நித்திரையினால் உறுதி பெறும் உறுப்பு எது? மூளை
- பிறப்பின் போது சிசுவின் சராசரி நீளம் யாது? 50cm
- பிறந்தவுடன் சிசுவின் நாடித்துடிப்பு எவ்வளவு? 120-140

எம்.ஏ. அஸ்ரின் அறபா
தரம்: 6
பொ/பொலன்னறுவை மு.ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளிக்குச் சென்ற விலங்குகள்

விலங்கின் பெயர்	அனுப்பப்பட்ட விலங்கு	அனுப்பிய நாடு	திகதி
லைகா	நாய்	சோவியத் ரஷ்யா	03.11.1957
லாஸ்கா பென்ஜி	எலி	அமெரிக்கா	13.12.1958
ஆபின் பேக்கர்	குரங்கு	அமெரிக்கா	28.05.1959
உட்வாய் நயா	முயல்	சோவியத் ரஷ்யா	02.07.1959
சாம் ஆண் ரீசஸ்	குரங்கு	அமெரிக்கா	04.12.1959
மிஸ் சாம் பெண்ரீசல்	குரங்கு	அமெரிக்கா	21.01.1960



றுக்ஸானா சுஹைறப்
தரம்: 10
அ/மானாருல் உலூம் மு.ம.வி. கம்பிரிகஸ்வெவ

அறிவுக்கு விருந்து

பற்றீரியாக்களில் ஒரு நிமிடத்துக்கு 18–20 தடவைகளில் பிளவு நடைபெறும். கொலரா நோய்க்குரிய பற்றீரியாக்கள் இந்த விதத்தில் பிளவடையுமாயின் 24 மணித்தியாலக் காலப் பகுதியில் 47000000000000000000000 (4.77×10^{22}) வரையான எண்ணிக்கையான பற்றீரியாக்கள் குடித்தொகையை உருவாக்கும். இவற்றின் திணிவு 2000 தொன்களாகும். ஆனால் உண்மையில் உணவு பற்றாக்குறை, அனுசேபக் கழிவுகள் நச்சுத்தன்மை ஆகியவை காரணமாக இவ் எண்ணிக்கைக்குப் பெருகுவதில்லை. உயிரங்கிகளின் தோற்றம் இவ்வாறான இரசாயனத் தொகுப்பு பற்றீரியாக்களுடன் ஆரம்பமாகியதாகக் கருதப்படுகிறது.

ஏ.ஏ. அஸ்வா பானு
02 ஆம் வருடம்
பாத்திமா ஸஹ்றா மகளிர் அரபுக் கல்லூரி
ஓட்டமாவடி

வினா விடை

- அஷ்ஷபா அத்துல் குப்ரா என்றால் என்ன? **பெரிய மன்றாட்டம்**
- மஹ்ஸர் என்பதன் பொருள் எதனைக் குறிக்கின்றது? **திறந்தவெளி**
- ஹௌளுல் கௌஸர் என்றால் என்ன? **சுவர்க்கத்தில் நபியவர்களுக்கு சொந்தமான நீர்த்தடாகம்**
- லிஆவுல் ஹம்த் என்றால் என்ன? **புகழுக்குரிய கொடி நிழல்**
- அந்-நாஹுர் என்றால் என்ன? **ஸூர்**
- பொய் நபிமார்கள் யாவர்? **முஸைலமா/அஸ்வத் அஸ்ஸி**
- நுபுவ்வத் என்றால் என்ன? **இறுதி நபித்துவம்**
- இமாரத் என்றால் என்ன? **பூமியை வளப்படுத்தல்**
- மகாமுன் மஹ்முதா என்பது எதனைக் குறிக்கின்றது? **மறுமையில் விசாரணையை அவசரப்படுத்துமாறு நபி அவர்கள் சுஜூதில் விழுந்து மன்றாட்டம் புரியும் இடம்**
- அஹ்லுல் கிதாப் என்றால் என்ன? **வேதத்தை உடையவர்கள்**
- மூஸா நபியின் தந்தை பெயர் என்ன? **இம்ரான்**

யு.எம். நப்றாஸ், தரம்: 09
தி/அல்பத்தாஹ் மு.ம.வி
நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறுவயது மாணவனின் பாடப் புத்தகத்தில் பூனை எலியைப் பிடிக்கும் என்று எழுதி இருந்தது. அவன் வீட்டிலும் எலிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தன. பாடப்புத்தகத்தைப் பார்த்தவனுக்கு வீட்டிலுள்ள எலிகளின் அட்டகாசங்களை ஒழிக்க ஒரே வழி பூனை வாங்குவதுதான் என்ற எண்ணமாகவே இருந்தது.



எலிகளிடம் கடி வாங்கிய பூனை

வீட்டுக்கு வந்து பெற்றோரிடம் பூனை எலியைப் பிடிக்குமா? என்று கேட்டான். ஆம் பிடிக்கும் என்றார்கள். அப்படியானால் எனக்கொரு பூனை வாங்கி தர வேண்டுமென்று கூறினான். அவன் பெற்றோர் ஒரு பூனையை விலைக்கு வாங்கிக் கொடுத்தார்கள். அந்தப் பூனையை இரவு சமையலறையில் வைத்து விட்டு, நம் பூனை எலிகளைப் பிடித்துக் கொன்று குவிக்கும். வீட்டில் எலிகளின் அட்டகாசம் இருக்கவே இருக்காது என்ற நம்பிக்கையில் நிம்மதியாய்த் தூங்கி விட்டான்.

காலையில் விழித்துப் பார்த்தான் பூனையை எலிகள் சேர்ந்து கடித்துக் குதறி, கிழித்து, சின்னா பின்னப் படுத்தியிருந்தது. இக்காட்சி அவன் உள்ளத்தில் திகிலை உண்டாக்கியது. தாங்க முடியாத துக்கத்தில் எலிகள் கடித்த பூனையைத் தூக்கிக் கொண்டு தேம்பி தேம்பி அழுதான். பூனை எலியைப் பிடிக்கும் என்று சொன்னீர்களே! என்னுடைய பாடப் புத்தகத்திலும் இப்படித்தானே எழுதி இருந்தது. மக்கு! எலியைப் பிடிக்காமல் எலிகளிடம் கடி வாங்கி வந்துள்ளதே என்று அழுதான்.

அதற்குப் பெற்றோர்கள். அன்பு மகனே! நிஜமான பூனைதான் எலி பிடிக்கும் பிளாஸ்டிக் பூனை எலி பிடிக்காது என்றார்கள்.

நம் முன்னோர்கள் உயிருள்ள பூனைகளாகயிருந்தனர். இன்றைய முஸ்லிம்கள் பிளாஸ்டிக் பூனைகளாகி விட்டனர். மற்றவர்களின் சாபத்திற்கு ஆளாகி குதறப்படுகிறார்களே! இப்படி கொடுமைகளுக்கு மேல் வரும் கொடுமைகளை அந்த அல்லாஹ்வைத் தவிர வேறு யாரிடம் முறையிட முடியும்? என்று கூறிவிட்டு,

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது மகனே!

அதுபோல பிளாஸ்டிக் பூனையும் எலியை பிடிக்காது என்றார்கள்.

ஹப்ஸா ஹுஸைன்
நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மிக நீண்ட ஆயுள் கொண்ட விலங்கு ஆமை.
- யானையின் தும்பிக்கையில் எலும்பு கிடையாது.
- ஆண் சிங்கங்கள் பெரும்பாலும் வேட்டையாடுவதில்லை.
- கங்காரு, இருந்த இடத்திலிருந்து 7 மீட்டர் தூரம் பாயும்.
- கண்களால் எளிதில் பார்க்கக்கூடிய கிரகம் யுரேனஸ்.
- மிக நீளமான சுரங்கப் பாதை உள்ள நாடு ஜப்பான்.
- மோட்டார் சைக்கிளை எடய்ம்லர் என்பவர் கண்டுபிடித்தார்.
- பகதுர்ஷா என்பவர் இந்தியாவின் கடைசி முகலாய மன்னன் ஆவார்.

எம். என். எம். முஸ்பிக்,
வெலம்பொடை, கண்டி.







சிந்தனைத் துளிகள்



- பிறந்த வாழ்வின் தலையாய அணிகலன் அடக்கமும் பணிவும் மட்டுமே.
- மற்றவரை நீ அவமானப்படுத்தினால் நீயும் தலைகுனிய வேண்டிவரும்.
- சமூகத்தை நீ நேசி உன்னைச் சமூகம் நேசிக்கும்.
- சிக்கனமாக இரு, ஆனால் கருமியாக இருக்காதே.
- மனிதன் முதலில் கற்றுக்கொள்ள வேண்டிய விடயம் மௌனமாகும்.
- பொறுமையென்ற திறமையிருந்தால் தன்னம்பிக்கை வெல்லும்.
- உன்னை நீயே திருத்திக்கொள், அப்படியானால் நீ சாதிக்கப் பிறந்தவன்.

பாத்திமா பஸ்லா நவாஸ், தரம் 10
க/தெறு/ஜமாலிய்யா மு. ம. வி
தந்துறை.

அறிந்து கொள்ளுங்கள்

- இலங்கை மிகப் பழைய காலத்தில் அழைக்கப்பட்ட பெயர் – தம்பபன்னி
- லக்சபான நீர் வீழ்ச்சியின் உயரம் – 129 மீட்டர்
- உயர் நீதியரசரின் பதவிக்காலம் – 5 ஆண்டுகள்
- குருதி உடலை ஒரு முறை சுற்றி வர எடுக்கும் காலம் – 60 வினாடிகள்
- புகையிலையிலுள்ள நச்சுப் பொருள் – நிக்கட்டீன்
- மனிதனின் உடலிலுள்ள குருதியின் அளவு – 6 லீட்டர்
- எலும்புகளின் துணையின்றி அசையும் உறுப்பு – நாக்கு
- முதன் முதலில் மருத்துவமனை தோன்றிய நாடு – ரோம்
- உலகிலே மிக நீளமான சுவர் – சீனப் பெருஞ் சுவர்

ஏ. மர்ளியா,
தரம்-05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான செல்வம் பணம் இல்லை மனித குணம்

தமிழில்: இப்னு ஸலீம்

பல வசதிகள் நிறைந்த பெரிய ஒரு நகரில் அக்பரின் அரச மாளிகை கம்பீரமாகக் காட்சி யளித்துக் கொண்டிருக்கிறது. ஆடம்பரம் அரச மாளிகை பூராகவும் படர்ந்துள்ளது. அக்பர் தனது மகன் தனக்கு கட்டுப்பட்டு தனது செல் வங்களுக்காக தன்னை நன்றி செலுத்தக் கூடியவனாக மாற வேண்டும் என விரும்பி ஒரு நாள் தனது மகனை அழைத்து தொலை வில் உள்ள ஓர் கிராமத்துக்கு சுற்றுலா சென்று வருமாறு கூறினார். காரணம் அந்த ஊர் மக்கள் மிகவும் வறியவர்கள். தனது மகன் அவர்களது வாழ்க்கையை பார்த்து தனது செல்வங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதே இந்த சுற்றுலாவின் நோக்கமாகும்.

ஆரம்பத்தில் மகன் தந்தையின் விருப் பத்தை மறுத்துவிட்டான். ஏனெனில், அவன் ஏழை மக்களை மனிதர்களாகவே பார்ப்ப தில்லை. என்றாலும், தந்தையின் வற்புறுத் தலால் சுற்றுலா செல்வதற்கு சம்மதித்தான்.

இரு நாட்கள் சுற்றுலா மேற்கொண்டு திரும்பி வந்தபோது அக்பர், "எப்படி பிரயா ணம்?" எனக் கேட்டார்.

மகன் "மிக நல்லம் தந்தை" என்றார்.

பின்னர் "நீ ஏழை மக்களை பார்த்தாயா?" என வினவினார்.

அதற்கு மகன் "ஆம்" என்றார்.

"இந்த பிரயாணத்திலிருந்து எதை கற்றுக் கொண்டாய்?" என தந்தை கேட்டார்.

அதற்கு மகன், "எம்மிடம் ஒரு நாய் உள்ளது. அவர்களிடம் நான்கு நாய்கள் உள்ளன. எம் மிடம் ஒரு குளம் உள்ளது. அவர்களிடமோ முடிவிலா சிற்றோடைகள் உள்ளன. எமது தோட்டத்தில் சில விளக்குகள் உள்ளன, அவர் களிடமோ இரவில் நட்சத்திரங்கள் உள்ளன. எம்மிடம் சிறியளவிலான நிலம் உள்ளது. அவர்களிடம் பரந்த வயல்வெளிகளும் தோட் டங்களும் உள்ளன. எமக்கு வேலை செய்ய தொழிலாளர்களும் கூலியாளர்களும் உள்ள னர். ஆனால், அவர்கள் ஏனையோருக்காக வேலை செய்கின்றனர். நாங்கள் உணவினை வாங்குகின்றோம். அவர்களோ உணவினை வளர்த்து வழங்குகின்றனர். எமது சொத்துக் களை பாதுகாக்க மதில் உள்ளது. ஆனால் அவர்களை பாதுகாக்க நல்ல நண்பர்கள் உள்ளனர். நாம் சந்தோஷத்தை மட்டுமே பார்த்துள்ளோம். ஆனால், அவர்கள் பிரச் சினைகளிலும் சந்தோஷமாக வாழ்கின்றனர். எம்மிடம் மாட மாளிகைகள் உள்ளன. அவர்க ளிடம் நல்ல மனிதத்துவ பண்புகள் உள்ளன" என்று கூறினார்.

மகனின் பேச்சை கேட்ட தந்தை பேச முடியாது வாயடைத்துப் போனார். பின் மகன் "தந்தையே! ஏழைகள் பற்றி உணர வைத்ததற்கு நன்றி" என்று கூறினார்.

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு ரோஜா

சின்னச் சின்ன ரோஜா
சிவப்பு நிற ரோஜா
கண்ணைக் கவரும் ரோஜா
காலை மலரும் ரோஜா
பஞ்சு போன்று மென்மை

பட்டுப் போன்று அழகு
விஞ்சும் நல்ல வாசம்
கொஞ்சி நானும் மகிழ்வேன்
அப்பா வைத்த செடியில்
அழகாய் பூத்துக் குலுங்கும்
ஆசையோடு பறிப்பேன்
அக்கா சூடக் கொடுப்பேன்

ஆமினா
தரம் 03

பாசமிகு தாயே!

பத்துமாதம் சுமந்தீரே
பள்ளிக் கூடமாய் திகழ்ந்தீரே
பாசத்துடன் வளர்த்தீரே
பாரினில் வெற்றி பெற

பாசமிகு தாயே!
பார் போற்றும் உத்தமியாய்
பண்பாட்டின் சிகரமாய்
பாரினில் வாழ்ந்திட
பரிவுடனே கற்றுத் தந்தீரே

பாசமிகு தாயே!
பக்குவமான உன் வார்த்தைகளை
பகிடிவதை செய்யாது
பணிவுடனே இப்பூமியில் வாழ்ந்து – என்
பாசமிகு தாயின் ஆசைகளை நிறைவேற்றுவேன்

நௌரா நபீல், தரம் 6
முஸ்லிம் ம.அ.க
கள்எலிய

குர்ஆன்

தீமை படிந்த உன் உள்ளத்தை
தீமையை அழிக்கும் குர்ஆனை
தினமும் ஓதி

இருள் நிறைந்த உன் வாழ்வை
ஒளி நிறைந்த குர்ஆனை ஓதி
இருளை ஒளியாக்கிடு

இறை கோபம் கொண்ட உன் செயல்களை
இறை மறை ஏற்று நடந்து
இறை கோபத்தை இறை நேசமாக்கிடு

நரக படுகுழியான உன் கப்ரை
சுவன பூஞ்சோலையாய் மாற்றிடு
இறை மறை வாழ்வை ஏற்று நடத்திடு

மீஸானில் உன் வெற்றிக்கான பகுதியை
கனமாக்கிட
இறை மறை சொல்லித் தரும்
பண்புகளை ஏற்று நடந்திடு

எம்.எம். நபீஹ் மஹ்மூத்
தரம் 09
புத்தளம் ஸாஹிரா தேசியப் பாடசாலை

உள்ளத்தின் கதறல்கள்

தாயே உன்னை நேசிக்கும்
உள்ளத்தின் உதிரங்கள் – நான்
நீ எனக்கு காட்டிய பாசத்தை
உணர மறுத்தது – உள்ளம்

நீ என்னை விட்டு பிரிந்தபோது
அதன் வலியை ஏற்கமறுத்தது – உள்ளம்
அன்று நான் உணர்ந்தேன்
வலியின் வேதனைகளை

அன்று
ஏந்தாத என் கரங்கள்
இன்று இறைவனிடம்
உனக்காக மன்றாடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Assalamualaikum dear friends !

"How much do you know?"



We are going towards the end of another year. After a month of hols, we are back to normal work, and preparing to give a successful finish to this year. I thought of giving you a funny story this time, which will also make you think. I know for sure , that all of you enjoy Thenali Raman jokes, So,,,,,, here we go.

Too many rats made life miserable for the people in the capital of the Vijayanagar kingdom. Even the palace was **infested** with **rodents**. "We need more cats", decided Krishna Deva Raya (the king) and sent messengers to bring them from other lands. He gave one cat to every family in his capital. The king also gave each family a cow, so that the cats could have fresh milk.

Thenali Raman got a cat, too with a cow. Every day, the cat lapped up the **frothing** milk, as Thenali Raman and his hungry family watched. "It is not fair," he thought. "My children need milk too". So one day he boiled the milk and served it hot to the cat. The cat bounced to its bowl as usual and put out its tongue to lap the hot milk. "Meeeee ooooow" it screamed as hot milk **scorched** its tongue. After that , the cat refused to touch milk at all. So Thenali Raman's children grew fat on the rich milk that the cow gave.

One day, all the people were asked to bring their cats to court so that the king could see that they were well looked after. All the cats were fat and healthy, except for one- and that was Thenali's !!

"Why is your cat so weak, Raman?" the king **thundered**. "Don't you feed it

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



properly?" For answer Thenali simply placed a bowl of milk before his cat. It **sniffed** at the milk and turned away. "Your Majesty, what can I do if the cat does not drink milk?" The king **nodded** understandingly. But one of the courtiers caught sight of the burn marks on the mouth of the cat. He told the king of it at once. The king shouted in anger. Thenali was frightened, but did not lose heart. He folded his hands and said, "How can I fatten my cat when my children have nothing to eat?"

"I won't punish you this time", said Krishna Deva Raya, Here's a bag of gold. Feed your children and the cat"

Courtesy : Gokulam

Don't worry friends , I will help you in learning the difficult words.

- Infested- polluted
- Rodents- Small animals like rats and squirrels
- Frothing- foaming with bubbles
- Thundered- Shouted with a big noise
- Sniffed- smelled
- Nodded- Moved the head up and down
- Scorched - baked

Your Corner

The ant and the grasshopper



It was summer. It was bright and sunny. Food was plentiful every where. A grass hopper was singing and dancing gay fully. He had every thing to eat. An ant was working very hard carrying food into her hole. The



grasshopper cried in mockery, "Oh! What a pity? You work hard on a sunny day. You lose all play, poor thing!" The ant replied, "It's ok my friend, we are storing for cold winter. You too, can save! "But the grasshopper did not take heed of it.



Soon came winter. It was cold every where. There was no food. The grasshopper began to starve. He went to the ant and asked for some food. The ant replied "You lazy fool, the whole summer you danced and, did not think about future. Go and dance now. I can't help you"

Rafai Rayeesa Nusrath
3rd Year
Fathima Zahra Ladies Arabic College.
Oddamavadi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My best friend

I have many friends. Safras is my best friend. He is of my age. We study in the same school. He helps me in my studies. He is also my neighbor. In the evening we play cricket. We also play chess. It helps us to improve our mind.

He is a good athlete, too. He always takes part in school athletic events. Therefore, I am very proud to have a friend like Safras.

K.M.Rifnas
Gr-06
B/Mirahawatta M.V

A teacher



A teacher plants
seeds of knowledge
for us, for that
they want to be respected

She punishes us for
our mistakes, and also
teaches good habits

She looks after us,
as her children,
and we respect
them as parents

Truly I want to say
That a teacher gives
All her try , to make
us good persons
in the society.

A.S.F.Amra
Welamboda

Sayings

A.H.Himas, Grade-06
Malvanai

1. Happy are those who are contented
2. No two great talkers travel too long together
3. One man's meat is another man's poison
4. Slow and steady wins the race
5. A parent's life is a child's guide book

MAKE LIFE WITH 10 LETTERS ! !

1 The most selfish one letter word... "I" Avoid it.
2 The most satisfying two letter word... "WE" Use it.
3 The most poisonous three letter word... "EGO" Kill it.
4 The most used four letter word... "LOVE" Value it.
5 The most pleasing five letter word... "SMILE" Keep it.
6 The fastest spreading six letter word... "RUMOUR" Ignore it.
7 The hardest working seven letter word... "SUCCESS" Achieve it.
8 The most enviable eight letter word... "JEALOUSY" Distance it.
9 The most powerful nine letter word... "KNOWLEDGE" Acquire it.
10 The most essential ten letter word... "CONFIDENCE" Trust it.

M.S.Mohamed Shamry
Grade 10
T/R.K.M.Sri Koneswara Hindu College

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

வரலாறு

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

1. பின்வரும் நாடுகளுள் தேசிய அரசுகளாக ஆரம்பத்தில் மாறிய 3 ஐரோப்பிய நாடுகளைத் தருக. (3 புள்ளிகள்)

   ரஷ்யா, கிரேக்கம், ஸ்பானியா, போர்த்துக்கல், துருக்கி, இங்கிலாந்து

2. தேசிய அரசின் பண்புகள் 4 தருக. (4 புள்ளிகள்)

3. நாடுகாண் பயணங்களுக்கு வழிவகுத்த காரணிகள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

4. நாடுகாண் பயணங்களால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

1. ஸ்பானியா, போர்த்துக்கல், இங்கிலாந்து

2. i. நாடு முழுவதும் ஒரே சட்டம் நிலவுதல்.

   ii. ஒரே வரிக்கொள்கை நடைமுறையில் இருத்தல்.

   iii. அரசனின் கட்டுப்பாட்டில் நாட்டின் சகல பிரதேசங்களும் இருத்தல்.

   iv. நாட்டின் செல்வமும் செல்வாக்கும் உயர்ந்த நிலையில் இருத்தல்.

3. **கொண்ஸ்தாந்து நோபிள் கைப்பற்றப்பட்டமை**

1453இல் கொண்ஸ்தாந்து நோபிள் நகரம் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டது. அதனால் கீழைத்தேசங்களுக்கும் மேலைத்தேசங்களுக்கும் இடையிலான தரைப்பாதை மூடப்பட்டது. தரைப்பாதை மூடப்பட்டமையால் கீழைத்தேசங்களில் விளைந்த வாசனைப் பொருட்களை ஐரோப்பியரால் பெற முடியாதிருந்தது. இதனால் அப்பொருட்களைப் பெறுவதற்கு கடற்பயணங்களில் ஈடுபட்டனர். வாஸ்கொடகாமா 1497இல் போர்த்துக்கல்லில் தனது கடற்பயணத்தை ஆரம்பித்து 1498 இல் கள்ளிக்கோட்டையை அடைந்தமைக்கு தரைப்பாதை மூடப்பட்டமையே காரணமாகும்.

அரச உதவிகள்

நாடுகாண் பயணங்கள் ஏற்பட்டமைக்கு அரசர்கள் வழங்கிய உதவியும் ஒத்துழைப்பும் முக்கிய காரணிகளாக அமைந்தன. போர்த்துக்கல்லைச் சேர்ந்த ஹென்றி மன்னன் கடற்பயணங்களை ஊக்குவித்தார். இதனால் அவர் 'கடலோடி ஹென்றி' என்று அழைக்கப்பட்டார். அவர் 1419 இல் மாலுமிகளுக்கு பயிற்சி வழங்கும் நிலையத்தை ஏற்படுத்தினார். அந்நிலையத்தில் படவரைக் கலைஞர்களும் வானசாஸ்திர நிபுணர்களும் மாலுமிகளுக்கு பயிற்சிகளை வழங்கினர். ஸ்பானியாவைச் சேர்ந்த மன்னன் பேடினன்டும் அரசி இசலெல்லாவும் கடற் பயணங்களுக்கு உதவினார்கள். இதன் காரணமாக கொலம்பஸ் 1492இல் கேடீஸ் துறைமுகத்திலிருந்து புறப்பட்டார். அவர் மேற்காகப் பயணம் செய்து ஸ்பானியோலாவை அடைந்தார்.

4. **சர்வதேச வர்த்தகம் விருத்தியடைந்தது**

முன்பு தரைப்பாதை வழியாக சிறிய அளவிலேயே சர்வதேச வர்த்தகம் இடம்பெற்றது. நாடுகாண் பயணங்களின் பின்பே சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. கொலம்பஸ் 1493இல் என்பலின் தீவுகளையும் 1498இல் டிரினாட்டையும் 1503இல் நிக்ராகுவாவையும் சென்றடைந்தார். இப்பிரயாணங்கள் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகம் வளர உதவின. வாஸ்கொடகாமா 1498இல் கள்ளிக்கோட்டைக்கு வந்த பின்பு பல தடவைகள் வர்த்தகப் பொருட்களைப் பெறுவதற்காக இந்தியாவுக்கு வந்தார்.

ஐரோப்பிய நாகரிகம் உலகில் பரவியது

ஐரோப்பிய சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்கள் உலகின் பல பாகங்களுக்கும் பரவுவதற்கு நாடுகாண் பயணங்கள் வழிவகுத்தன. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தமையால் தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் போர்த்துக்கேயச் சொற்கள் கலந்தன. ஒல்லாந்தர் இலங்கைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து இலங்கையின் கரையோரங்களைக் கைப் பற்றினர். இதனால் அவர்களது 'உரோமன் டச்சுச் சட்டம்' இலங்கையில் அறிமுகமாகியது. ஆங்கிலேயர் இலங்கை முழுவதையும் 1815இல் கைப் பற்றினர். இதனால் அவர்களது பண்பாடுகளும், தேர்தல், மந்திரி சபை முதலிய அரசியல் நடைமுறைகளும் இலங்கையில் அறிமு கமாகின.

11ம் தரம்

பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. 6ஆம் பராக்கிரமபாகு காலத்தில் வாழ்ந்த ஒருவர் அறிந்திக்க முடியாத ஒரு விடயம்.
   i. மாகனின் படையெடுப்பு
   ii. முல்லேரியாப் போர்
   iii. 5ம் மகிந்தன் கைது செய்யப்பட்டமை
   iv. செங்கோ தளபதி இலங்கைக்கு வந்தமை

2. நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடை

	நிரல் 1		நிரல் 2
i.	பியட்டா சிலை	A	லியனாடோ டாவின்ஸி
ii.	வானியலின் தந்தை	B	மைக்கல் ஆஞ்சலோ
iii.	மோனலிசா	C	கொபர்னிகஸ்
iv.	குருதிச் சுற்றோட்டம்	D	ஹார்வே

i. ACBD ii. BCAD
iii. BCDA iv. DABC

3. பாமினி அரசின் முதல் மன்னனும் இறுதி மன்னனும் முறையே
   i. அகமது ஷா-ஹுமாயுன்
   ii. ஹுமாயுன்-அஹமது ஷா
   iii. பகமன் ஷா-ஹுமாயுன்
   iv. ஹுமாயுன்-பகமன் ஷா

4. நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடை

	நிரல் 1		நிரல் 2
i.	உறுவெல	A	மாணிக்க கங்கை
ii.	மகாகம	B	கலாஓயா
iii.	கதரகம	C	கல்ஓயா
iv.	தீகவாபி	D	கிருண்டி ஓயா

i. BCDA ii. CDAB
iii. BDAC iv. BDCA

5. தன்னை அமெரிக்காவின் பிரதிவிம்பம் என்று கூறியவர்
   i. கஜனி முகம்மது
   ii. கோரி முகம்மது
   iii. அலாவுதீன் கல்ஜி
   iv. துக்ளக்

6. ஜனநாதபுரம் என்று எந்நகரம் அழைக்கப்பட்டது?
   i. சீகிரியா ii. அனுராதபுரம்
   iii. கம்பளை iv. பொலன்னறுவை

7. நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடை.

	நிரல் 1		நிரல் 2
i.	அரசுக்கழகம்	A	1912
ii.	செனற்சபை	B	1833
iii.	ஆங்கில போதனா மொழி	C	1947
iv.	மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை அறிமுகம்	D	1931

i. DCBA ii. DACB
iii. DBCA iv. DBAC

8. ஜோர்ஜ் பட் என்பவர் எந்த இடத்தில் கோப்பித் தோட்டத்தை அமைத்தார்?
   i. கண்ணொறுவை ii. சிங்கபிட்டி
   iii. கம்பளை iv. பேராதனை

9. நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் விடை

	நிரல் 1		நிரல் 2
i.	வித்யோதய பிரிவெனா	A	தர்மாலோக தேரர்
ii.	வித்யலங்கார பிரிவெனா	B	சுமங்கல தேரர்
iii.	விவாதம்	C	டீ.பி. ஜயதிலக
iv.	பௌத்த வாலிப சங்கம்	D	குணானந்த தேரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. BACD ii. BCAD

iii. BADC iv. BDCA

10. நாகசாகியில் அணுகுண்டு வீசப்பட்ட திகதி.

i. 1945.8.6 ii. 1945.8.7

iii. 1945.8.8 iv. 1945.8.9

11. சீனாவில் முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் அறிமுகமாகிய ஆண்டு.

i. 1960 ii. 1959

iii. 1958 iv. 1949

12. 1ம் உலகப் போரில் நட்பு அணியில் இல்லாத ஒரு நாடு.

i. பிரான்ஸ் ii. ரஷ்யா

iii. இங்கிலாந்து iv. துருக்கி

13. தற்போது பொறுப்பும் செல்வாக்கும் இல்லாத ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு நிறுவனம்.

i. பாதுகாப்புச் சபை

ii. பொதுச் சபை

iii. நம்பிக்கைப் பொறுப்பு சபை

iv. பொருளாதார சபை

14. மார்ஷல் திட்டம் அமுலாக்கப்பட்ட ஆண்டு.

i. 1949 ii. 1950

iii. 1951 iv. 1952

15. இஸ்ரேலின் உளவுச் சேவை.

i. சீ.ஐ.ஏ ii. ஜே.பி

iii. மொஸாட் iv. றோ

விடைகள்

1.	ii	12.	iv
2.	ii	13.	iii
3.	iii	14.	i
4.	iii	15.	iii
5.	iii		
6.	iv		
7.	i		
8.	ii		
9.	iii		
10.	iv		
11.	ii		

(04ஆம் பக்கத் தொடர்...)

இறைவனின் அன்பை மாத்திரம் அடிப்படையாக ஆக்கிக்கொண்டு தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் எப்போதும் இவ்வுலகில் பணிவுடன் நடந்து கொள்வார்கள். அல்குர்ஆனும் இப்பண்பை ரஹ்மானுடைய அடியார்களின் பண்புகளில் ஒன்றாக வர்ணிக்கின்றது.

எனவே, நாமும் எமது பாடசாலை மற்றும் சமூக வாழ்வில் பணிவு எனும் பண்பை வளர்த்து அல்லாஹ்விடத்தில் பணிவுள்ளவர்களாக மாற முயற்சிப்போம்.

(32ஆம் பக்கம் பார்க்க...)

iii. iPad மட்டும் வைத்திருந்த பெண்கள் 23 பேர் எனின் iPad வைத்திருந்த பெண்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

iv. ஆண்கள் 60 பேர் எனின் iPad வைத்திராத பெண்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

v. இவற்றுள் ஒன்றை மட்டும் வைத்திருந்தவர்கள் 69 பேர் எனின் இவற்றுள் ஒன்றையேனும் வைத்திராத ஆண் அல்லாதவர்கள்? (2 புள்ளிகள்)

(தொடரும்...)

அகரம் பாடசாலை அறிமுகம்

⇨ உங்கள் பாடசாலையை அறிமுகப்படுத்த உங்கள் அபிமான சஞ்சிகையான அகரம் தயாராக உள்ளது.

⇨ உங்கள் பாடசாலை, அதன் வரலாறு, சாதனைகள் என்பவற்றை அறிமுகப்படுத்த அகரம் களம் அமைத்துக் கொடுக்கிறது.

தொடர்புகளுக்கு: முஸ்தாக் : 0777 369 306
அலா அஹ்மத் : 0716 919 423

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இளைஞர்களிடம் ஒரு விடயத்தை செய்வதற்கு யார் முன்வருகிறீர்கள்? என்று கேட்டால் பலரும் தயங்குவர். பலரும் பின்நிற்கவே செய்கின்றனர். ஆனால், வாழ்வில் முன்னேற விரும்புபவர்கள் எதற்கும் முன்வருபவர்களே!

கருத்தரங்குகள், செயலமர்வுகளின் போது அழைத்தால் முன்வருபவர்கள் மிக மிகக் குறைவாக இருப்பதை நாம் அவதானிக்கிறோம். எதையும் முட்டி மோதும் காளையர்கள்தான் எந்த சவாலையும் ஏற்று வெற்றி பெறுகின்றனர். தயங்கித் தயங்கி நிற்பவர்கள் முன்னேறுவது கிடையாது.

ஒரு நிமிடத் தயக்கம்

நீல் ஆம்ஸ்ட்ரோங்

எட்வின் சி ஆல்ட்ரின்

நிலவில் முதன்முதலில் கால் வைத்தவர் யார்?

இந்தக் கேள்விக்கு யாராயிருந்தாலும் உடனே பதில் சொல்லிவிடுவீர்கள், நீல் ஆம்ஸ்ட்ரோங் என்று.

நிலவில் முதன்முதலில் கால் வைத்திருக்க வேண்டியவர் யார் தெரியுமா?

பல பேருக்கு தெரியாது.

அவர், எட்வின் சி ஆல்ட்ரின். அவர்தான் நிலவுக்கு சென்ற அப்பலோ விண்கலத்தின் விமானி (Pilot).

ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமானப் படையில் பணி புரிந்தவர். மேலும் விண்நடை அனுபவம் உள்ளவர். அதனால் அவர் விமானியாக நியமிக்கப்பட்டார்.

நீல் ஆம்ஸ்ட்ரோங் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். மிகுந்த தைரியசாலி என்பதால்தான் இந்த பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இணை விமானி (Co-Pilot).

இவர்கள் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

"Pilot First"

ஆனால், ஆல்ட்ரினுக்கோ மனதில் சின்ன தயக்கம்.

நிலவில் முதன் முதலில் கால் எடுத்து வைக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம். புவியீர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கிறோம். கால் வைக்கும் இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்துவிட்டால், எரி மணலாக இருந்து காலை சுட்டுவிட்டால் தயக்கத்தில் சில நொடிகள்தான் தாமதித்திருப்பார்.

அதற்குள் நாசாவில் இருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

"Co-Pilot Next."

நீல் ஆம்ஸ்ட்ரோங் கட்டளை வந்த அடுத்த நொடி காலடி எடுத்து வைத்தார்.

உலக வரலாறு, ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமையும் தகுதியும் இருந்தும் கூட தயக்கத்தின் காரணமாக தாமதித்ததால் இன்று ஆல்ட்ரினை யாருக்கும் தெரியவில்லை.

இனி நிலவை பார்க்கும்போதெல்லாம் இந்தச் சம்பவத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

பெருமைக்கும் முன்வருவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. பெருமையிலிருந்து தவிர்ந்து இருங்கள். ஆனால், பணிவு என நினைத்து முன்வருவதிலிருந்து தவிர்ந்து இருந்து விடாதீர்கள்.

அழைத்தால் முன்வருதல்: அழைக்காவிட்டால்...

நாம் முதலில் பேசியது அழைத்தாலும் முன்வராதவர்களைப் பற்றியே. ஆனால், சிலர் இருக்கின்றனர். அவர்களை அழைத்தால் அவர்கள் முன்வந்து செயற்படுவர். இவர்கள் இரண்டாவது வகையினர்.

சில சந்தர்ப்பங்கள் வரும் அப்போது சில விடயங்களை நீங்கள் முன்வந்து செய்ய வேண்டும். அவ்வேலையைச் செய்யுமாறு உங்களை யாரும் அழைக்க மாட்டார்கள். அந்த வேலையில் யாரும் கவனம் செலுத்தியிருக்கவும்மாட்டார்கள்.

> அப்படிப்பட்ட ஓர் உதாரணத்தையே நபி யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அரச கருவூலங்களின் அதிகாரத்தை தன்னிடம் ஒப்படைத்தால் வறுமையை ஒழிக்கக்கூடிய சிறந்த திட்டமொன்றை வரைந்து அதனை சிறப்பாக நிர்வகிக்க முடியும் என்று முன்வந்ததைக் குறிப்பிடலாம்.

அது பலரின் கண்ணுக்குப் புலப்படாத ஒன்றாகவே இருக்கும். ஆனால், அதனால் ஏற்படுகின்ற அசௌகரியங்களையும் இழப்புக்களையும் பலரும் ஏதோவிதமாக உணர்ந்தும் அனுபவிக்கவும் செய்வர். அல்லது அந்த விடயத்தை அறிந்திருந்தாலும் அதனை முன்வந்து ஏற்கத் தயாரில்லாதவர்களாகவே அனைவரும் இருப்பர். இதனை உணர்ந்து அந்த விடயத்தை தாமாக இனங்கண்டு முன்வந்து செயற்படுபவர்களைப் பற்றியே நாம் இங்கு பேசுகிறோம்.

அப்படிப்பட்ட ஓர் உதாரணத்தையே நபி யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அரச கருவூலங்களின் அதிகாரத்தை தன்னிடம் ஒப்படைத்தால் வறுமையை ஒழிக்கக்கூடிய சிறந்த திட்டமொன்றை வரைந்து அதனை சிறப்பாக நிர்வகிக்க முடியும் என்று முன்வந்ததைக் குறிப்பிடலாம்.

கவனிப்பாரற்றுக் கிடக்கும் பல வேலைகளை இத்தகைய இயல்புள்ளவர்கள் தாமாக முன்வந்து கவனித்து அவற்றைத் தீர்த்து வைப்பர். இதனை சிறந்த தலைமைத்துவத் திறனாக அடையாளப்படுத்தலாம். இதற்கான பயிற்சி(Training)களை முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வழங்கியுள்ளார்கள்.

"பாதையில் கிடக்கும் மனிதனுக்கு இடையூறு விளைவிக்கும் பொருட்களை அகற்றுவதும் தர்மமே!" என முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

சாதாரணமாக பாதையில் கிடக்கும் இத்தகைய இடையூறுகளைப் பொருட்படுத்தாது செல்லும் பலருள் நீங்களும் ஒருவரா என சிந்தித்துப் பாருங்கள். அவ்வாறாயின் எதையும் கண்டும் காணாதது போல கவனமின்றி இருப்பவரா நீங்கள் என்ற கேள்வியை கேட்டுப் பாருங்கள்.

முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வழங்கியுள்ள இத்தகைய பயிற்சியை (Training) நீங்கள் பெறுகின்ற போது சிறந்த தலைமைத்துவ ஆளுமையை உங்களையறியாமலேயே நீங்கள் வளர்த்துக் கொள்கிறீர்கள்.

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது நாட்டில் நிலவிய பல பிரச்சினைகளை தேடிக் கண்டறிந்து தீர்த்து வைத்தார்கள். காரணம், இவற்றுக்கும் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புச் சொல்ல வேண்டுமே என்ற பொறுப் புணர்வாகும். இரவில் நாட்டு நிலைமைகளை அறிவதற்காகப் புறப்பட்டு விடுவார்கள். மக்களின் தேவைகளை தேடித் தேடிக் கண்டறிந்து நிவர்த்தி செய்வார்கள். இத்தகைய Forwardness அவர்களி டம் காணப்பட்ட சிறந்த தலைமைப் பண்பின் அணிகலனாகும்.

வாழ்வில் முன்னேற முன்வாருங்கள்

கண்டும் காணாதது போல் வாழும் பலரைக் கண்டிருப்பீர்கள். இது பொடுபோக்குத்தனத்தை ஏற்படுத்தும். அக்கறை செலுத்துங்கள். முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சமூக விவகாரங்களில் அக்கறை உள்ளவர்களாக இருந்துள்ளார்கள். சமூக விவகாரங்களில் அக்க றையுடன் செயற்படுமாறும் கற்றுத் தந்துள்ளார்கள்.

“யார் முஸ்லிம்களின் விவகாரங்களில் அக்க றையின்றி இருக்கின்றாரோ அவர் எம்மைச் சார்ந் தவரல்ல” என நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

முன்வருதல் என்பது பலவிதமாக அமையும்.

- அழைக்கின்ற போது தயங்காமல் முன்வருதல்.
- அழைக்காத போதும் தேவையறிந்து முன்வரு தல்.
- பொறுப்புணர்ந்து அவற்றை நிறைவேற்ற முன்வருதல்.
- அலட்சியம் நீங்கி கவனம் செலுத்த முன்வரு தல்.
- சில விடயங்கள் உங்கள் கவனத்தை ஈர்க்கின்ற போது அவற்றை நிவர்த்திக்க முன்வருதல்.

பொருத்தமானவர்கள் முன்வருகின்றபோது பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும். முன்வருவதற்கு துணிச்சல் தேவை. சவால்களை எதிர்கொள்ளும் தைரியம் தேவை. சாணக்கியம் தேவை. முன்வந்த பிறகு பின் செல்ல முடியாது. முன்வந்தால் என்றும் வெற்றி உங்களுக்கே! வாழ்த்துக்கள்.

PUBLIC LIBRARY
JAFFNA

(25ஆம் பக்கத் தொடர்...)

ஆசிய இளையோர் மெய்வல்லுநர் போட்டிகள்

2வது ஆசிய இளையோர் மெய்வல்லுநர் போட்டிகள் 2013 ஆகஸ்டில் சீனாவின் நான்ஜிங் நகரில் நடைபெறுகின்றன. இப் போட்டிகளுக்கு இலங்கையில் இருந்து 37 வீர வீராங்க னைகள் பங்கேற்றுள்ளனர். 1வது ஆசிய இளையோர் மெய் வல்லுநர் போட்டிகள் 2009இல் சிங்கப்பூரில் நடைபெற்றன.

இலங்கையின் 2வது மிருகக்காட்சிசாலை

- பின்னவலையில் அமைக்கப்படும் இலங்கையின் இரண்டாவது மிருகக்காட்சிசாலை 2013 டிசம் பரில் திறந்துவைக்கப்பட உள்ளது.
- இலங்கையின் 1வது மிருகக்காட்சிசாலை தெஹி வளையில் அமைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகம்

- இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகம் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட உள்ளது.
- 1950/08/28இல் உருவாக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி மாத்தறை, அநுராதபுரம், மாத் தளை, திருகோணமலை, கிளிநொச்சி (தற்போது யாழ்ப்பாணம்) ஆகிய இடங்களில் பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

11வது உலகக்கிண்ண கிரிக்கட் போட்டி

- 11வது உலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகள் 2015 பெப்ர வரியில் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுக ளில் நடைபெறவுள்ளன. 49 போட்டிகள், 44 நாட்கள், 14 இடங்களில் நடைபெறவுள்ளன.
- இப்போட்டிகளில் பிரிவு Aயில் இலங்கை உட்பட ஏழு அணிகளும், பிரிவு Bயில் ஏழு அணிகளுமாகப் பதின் நான்கு அணிகள் பங்கேற்க உள்ளன. ஐ.சி.சி யினால் கடந்த 1975 முதல் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை 50 ஓவர் கொண்ட உலகக்கிண்ண கிரிக்கட் தொடர் நடை பெறுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்மா சர்ச்சை

- 2013 ஆகஸ்டில் இலங்கைக்கு நியூஸிலாந்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பால்மா உற்பத்திப் பொருட்களில் CDC என்ற இரசாயனப்பொருள் கலந்துள்ளதாகக் கருதப்பட்டது. பொன்டெரா நிறுவன இறக்குமதிப் பொருளான அங்கர் பால்மாவிலேதான் இவ்விரசாயனப் பொருள் கலந்திருந்ததாக கருதப்பட்டது.
- நியூஸிலாந்தில் பசுக்கள் அதிகமாக உள்ளதால் அவற்றின் சிறுநீரினால் சூழல் மாசடைவதைத் தடுக்க விவசாயிகள் பயன்டுத்திய டய்கைன் டயமைட் (CDC) என்ற நச்சு இரசாயன பொருள் தெளிக்கப்பட்ட புல்வகையைப் பசுக்கள் உட்கொண்டதன் காரணமாகவே இச் சர்ச்சை ஏற்பட்டது.
- உலகில் CDC குறித்த பரிசோதனையைச் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட UV Visible Spectroscopy couple Lc யும் Mass Spectroscopy coupled Lc ஆகிய இரு முறைகள் உள்ளன.

உலகின் அதிவேக ஆண், பெண்

2013 ஆகஸ்டில் மொஸ்கோவில் நடைபெற்ற 14வது உலகத் தடகளச் சம்பியன்ஷிப் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமெய்க்காவின் உசைன் போல்ட் 9.77 விநாடிகளில் ஓடி முதலிடத்தை அடைந்து தங்கப்பதக்கம் வென்றார். இதன்மூலம் உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டி மற்றும் ஒலிம்பிக் போட்டி ஆகிய இரண்டிலும் தலா ஆறு பதக்கங்களை வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இதேபோல் இப்போட்டியில் ஜமெய்க்காவின் ஷெல்லி ஆன் பிரஸர் பிரைஸ் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 10.71 விநாடிகளில் ஓடி முதலிடத்தை அடைந்து தங்கப் பதக்கம் வென்றார்.

திரு. பீ. உமா சங்கர்,
B.Com (jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

இலங்கையின் புதிய இராணுவத் தளபதி

- 2013 ஆகஸ்டில் இலங்கையின் 20 வது புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது ஓய்வு பெற்றுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இலங்கையின் 1வது இராணுவத் தளபதி ரொட்றிக் சின்கிளேயர் ஆவார்.
- புதிய இராணுவத் தளபதி குருநாகல் மலியதேவா கல்லூரியின் பழைய மாணவராவார்.

இலங்கையின் தேசிய பாடசாலைகள்

2013 ஆகஸ்டில் வடமாகாணத்தில் ஏழு பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் இலங்கையில் தற்போது 350 தேசிய பாடசாலைகள் உள்ளன. இலங்கையில் 1987ம் ஆண்டு தேசிய பாடசாலைகளை உருவாக்கும் நடைமுறை ஆரம்பமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு துறைமுக விஸ்தரிப்பு திட்டம்

கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செயற்திட்டத்தின் புதிய துறைமுக உட்கட்டமைப்பு மற்றும் புதிய இறங்கு துறையை கையளிக்கும் நிகழ்வு 2013 ஆகஸ்டில் நடைபெற்றது.

கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் 03 இறங்கு துறைகளும் (1200 மீற்றர் நீளம், 18-23 மீற்றர் ஆழம்) இரண்டாவது கட்டத்தில் முதலாவது கொள்கலன் இறங்கு துறையும் நிர்மாணிக்கப்படவுள்ளன. ரூபா 500 மில்லியன் அமெரிக்க டொலர் பாதிடப்பட்ட இச்செயற்திட்டம் 2011 டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டு 2014இல் முழுமையாக நிறைவு செய்யப்பட உள்ளது.

இச்செயற்திட்டம் சீனாவின் BOT ஒப்பந்த அனுசரணையில் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது.

சிம்பாப்வே

ஜனாதிபதி தேர்தல்

2013 ஆகஸ்டில் சிம்பாப்வேயில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 89 வயதான ஸனு.பி.எம். கட்சியைச் சேர்ந்த றொபேட் முகாபே 75% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இதன் மூலம் இவர் சிம்பாப்வேயில் தொடர்ந்தும் 7வது தடவையாக ஜனாதிபதியாகப் பதவி ஏற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் 29வது மாநிலம்

- இந்தியாவின் 29வது மாநிலமாக தெலுங்கானா உதயமாக உள்ளது.
- தற்போதுள்ள ஆந்திரா மாநிலமே இரண்டாகப் பிரிக்கப்பட்டு தெலுங்கானா உருவாக உள்ளது.
- ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களுக்கு ஹைதரபாத் பொதுவான தலைநகராக விளங்கும்.
- விரைவில் உதயமாக உள்ள இப்புதிய மாநிலத்தில் பத்து மாவட்டங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இது இந்தியாவின் வடக்கையும், தெற்கையும் இணைக்கும் நிலப்பரப்பின் மையத்தில் அமைந்துள்ள பகுதி ஆகும்.

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் IAAF

- 14வது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் Luzhniki மைதானத்தில் 2013 ஆகஸ்டில் நடைபெற்றன. இப் போட்டிகளுக்கு இலங்கையில் இருந்து எட்டு வீர வீராங்கனைகள் பங்கேற்றனர். இப்போட்டியில் 206 நாடுகள் 26 போட்டிகளில் பங்குபற்றுகின்றன.
- 1வது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் 1983ம் ஆண்டு பின்லாந்து நாட்டின் ஹெல்சிங்கியில் நடைபெற்றன.

சமூக அபிவிருத்திக்கான நீர் ஒத்துழைப்பு மாநாடு

2013 ஆகஸ்டில் சமூக அபிவிருத்திக்கான 2வது சர்வதேச நீர் ஒத்துழைப்பு மாநாடு அநுராதபுரம் மாகாணசபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(23ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

வினாத்தொகுப்பு பகுதி III - 01ஆம் வினாக்குரியது

மாணவர்களே! பகுதி IIIஇல் 01ஆம் வினா கட்டாயம் செய்யப்பட வேண்டிய வினாவாகும். 20 புள்ளிகளை அள்ளித்தரும் இப்பகுதிக்குள் அடங்கும் வினாக்களின் மாதிரி, ஒன்று தொடக்கம் ஆறு வரை வினாத்தொகுப்பாக கடந்த அகரம் இதழ்களில் தந்தோம். இன்னும் அதன் தொடர்ச்சி தொடர்கிறது, கற்றுப் பயன்பெறுங்கள்.

மாதிரி வினாத்தொகுப்பு 07

01. சுருக்கமான விடை தருக.

i. சொல்லுக சொல்லில் பயன் உடைய
சொல்லற்க சொல்லில் பயனிலாச் சொல்
அ) கொண்டு கூட்டி எழுதுக.
ஆ) பொருள் எழுதுக.

ii. 'கல்வியே அழியாச் செல்வம்' கட்டுரை ஆசிரியர் யார்?

iii. "நாணிப் பெருஞ் செல்வர் இல்லத்து நல் கூர்ந்தார் போல வரும் செல்லும் பேரும் என் நெஞ்சு" உவமையை விளக்குக.

iv. "கூடல் கூடல் கூடல் கூடிப்பின்னே குமரன் போயில் வாடல், வாடல்" என பாரதியார் எப்பாடலில் பாடுகிறார்?

v. 'நாலடியார்' என இந்நூலுக்கு பெயர் வரக் காணம் யாது?

vi. கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழராஜா அமைத்திருக்கும் கோயில் தஞ்சாவூர் கோயிலெனக் கூறுபவர் யார்? அவரது மனைவியின் ஊர் எது?

vii. "தங்கம், பணம் தானா எல்லாம் அதைவிட ஒருவரின் நல்லெண்ணம் பெரிசல்லவா?" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

viii. நட்சத்திரக் குழந்தையில் வந்துள்ள பாத்திரங்கள் யாவை?

ix. தனிப்பாடற்றிரட்டு எனப்படுவது யாது?

x. 'பள்ளத்திலிருக்கும் நீர் பாதையிலே ஏறாது துள்ளிப்படர்ந்து தொடருகிற காலமும் சற்று நின்று பின்னோக்கித் தாமதிக்கமாட்டது' என்று இ. முருகையன் கூற முற்படும் விடயத்தை விளக்குக.

மாதிரி வினாத்தொகுப்பு 08

01. சுருக்கமான விடை தருக.

i. உறுபுலி ஊனிரையின்றி ஒரு நாள் சிறு தேரை பற்றியுந் தின்னும்.
அ) சந்தி பிரித்தெழுதுக.
ஆ) இப்பாடலினூடாக உணர்த்தப்படும் விடயம் யாது?

ii. "ஏரிக்கரையில் அஞ்சாறு சத்திரம் இருக்கே! உங்களுக்கு எந்த ஊரு"?
அ) யாரால் கூறப்பட்டது?
ஆ) கூத்தர் கூறும் ஊர் எது?

iii. "ஐயையோ பைத்தியம் இப்படி சிரிச்சுண்டு பேசிக் கொண்டு இருக்கேனே" யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

iv. "பேற்றிலே மிகு மொருவன்..." எனத் தொடங்கும் பழமொழிப் போதனையைப் பாடியவர் யார்?

v. "அல்லிக்குளத்தருகே ஒரு நாள் அந்திப் பொழுதினிலே..." என்று பாடிய பாரதி வள்ளியும் முருகனும் எதனைத் தூதாக அனுப்புவதாகப் பாடுகிறார்?

vi. தங்கம்மாவின் தந்தையின் தொழில் என்ன? அவளது கணவனைத் தேடிவந்த கிராம சேவகர் பெயர் என்ன?

vii. ரோஹினியின் தந்தையின் முழுப் பெயர் என்ன? அவரது படிப்புத்தரம் எதுவெனசச் சிறுகதை கூறுகிறது?

viii. 'புவன முழுதுடையாள்' என்பவர் யாருடைய மனைவி?

ix. கலம்பகம் எனப்படுவது யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x. "வேனிலுடன் முதிர்ந்து-கனிந்த பழங்களின் மனிதன் உணரா இனிமை இரகசியத்தை பரிமாறும் காக்கைகள்" எனும் கவி வரியினூடாக உணர்த்தப்படும் விடயத்தைக் கூறுக.

மாதிரி வினாத்தொகுப்பு 07

விடைகள்

01.

i. அ) சொல்லில் பயன் உடைய சொல்லுக.

சொல்லில் பயனிலாச் சொல் சொல்லற்க.

ஆ) பயனில்லா சொற்களை நீக்கி பயன்தரக் கூடிய சொற்களைப் பேசுதல் வேண்டும்.

ii. மறைமலை அடிகள்

iii. தலைவனைக் காண கதவருகில் சென்று திரும்பும் தலைவி, செல்வந்தரிடம் சென்று சாதம் கேட்காமல், திரும்பும் வறுமையுடையோருக்கு உவமை செய்யப்படுகிறாள். 'நாணம்' பொதுத் தன்மையாகும்.

iv. குயில்பாட்டில்

v. நான்கு அடிகளில் வெண்பா யாப்பில் பாடப் பட்டமை

vi. ஞானசம்பந்தன் - திரிபுவனம்

vii. யாரால்: தருமலிங்கத்தால் யாருக்கு: மனைவிக்கு

viii. குழந்தை ரோஹினி

தாய் தந்தை சோமசுந்தரம்

ix. பல்வேறு காலகட்டங்களில் பல புலவர்களால் பாடப்பட்ட தனித்தனி செய்யுள்கள் (பாடல்கள்) சிலவற்றின் தொகுப்பு.

x. காலத்தை நதிக்கு உவமை செய்கிறார். பள்ளத்தில் வீழ்ந்த நதி மீண்டும் மலை நோக்கிச் சென்று விடுவதில்லை. அதுபோல கழிந்த காலம் மீண்டும் வரப்போவதில்லை என்ற யதார்த்தம் உணர்த்தப்படுகிறது.

(தொடரும்...)

(29ஆம் பக்கத் தொடர்...)

1. அமைதியான ஓர் இடத்தில் அமர்தல் அல்லது படுத்தல்.
2. ஆடைகளைத் தளர்த்தல்.
3. அமரும் முறை

- கால்கள் நிலத்தில் முழுமையாகப் படல்.
- பாதங்கள் முழங்காலில் வைத்தல்.
- முள்ளந்தண்டை நேராக்கல்.
- கண்களை மூடதல்.
- ஆழமாக மூச்சை மெதுவாக உள்ளெடுத்தல். இதன்போது 1, 2, 3 என மனதால் எண்ணலாம்.
    - வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதிகளைக் காற்றினால் நிரப்புதல்.
    - சற்று நேரம் காற்றை அவ்வாறு நிரப்பி வைத்திருத்தல்.
    - பின்னர் மெதுவாக வாய்வழியாக காற்றை வெளிவிடல்.
    - இதை மூன்று முறை செய்தல்

4. கண் முன்னால் தோன்றும் கருமையில் கவனத்தை நிறுத்தல்.
5. எண்ண அலைகளை ஓயவிடல், ஒன்றை மட் டும் சிந்தித்தல்.

"நான் அமைதியாக இருக்கிறேன்"

"நான் சந்தோசமாய் உள்ளேன்"

"என்னால் பிரச்சினையைச் சமாளிக்க முடியும்" என வாயால் மொழிந்து மனதை நிலைப் படுத்தல்.

6. மீண்டும் ஆழமாக மூச்சை மெதுவாக உள்ளெடுத்து முன்பு செய்தது போல் செய்தல்.
7. கண்களைத் திறத்தல்.

மூச்சை உள்ளெடுக்கும்போது மூக்கையும் வெளிவிடும்போது வாயையும் பயன்படுத்த வேண்டும். காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். இப்பயிற்சியானது மிகச் சிறந்ததும் அதிகம் பிரயோசனம் தரக்கூடியதுமாகும்.

அடுத்தது சீரான முறையில் ஊட்டச் சத்துக்களைச் சாப்பிடுங்கள். மேலும் சொற்பளவேனும் உடற்பயிற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுங்கள்.

இன்ஷா அல்லாஹ், இந்த விடயங்கள் அனைத்தும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும். மேலே குறிப்பிட்டது போன்று, நேரகாலத்தோடு போதுமானளவு தூங்குங்கள். துங்கும்போது ஓதும் ஓதல்கள், துஆக்களை மறந்துவிட வேண்டாம். இன்னும் தொழுகைகளின்போது உங்களுடைய பிரச்சினையை அல்லாஹ்விடம் முறையிட்டு அதற்கான தீர்வினையும் கேளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனீபா ஏ.வஹாப் (இஸ்லாஹி)



"நான் கடுமையாக முயற்சி செய்து படிக்கிறேன். இருப்பினும் நான் எதிர்பார்க்கும் பெறுபேறுகளைப் பெற முடியாதுள்ளது. தீர்வு என்ன?"

கேள்வி :

அஸ்ஸலாமு அலைக்கும்

சிறு வயதிலிருந்தே நான் பெறும் புள்ளிகள் எனக்கு கவலையளிக்கின்றது. நான் தொடர்ச்சியாக முயற்சித்து அதிக மாகப் படிக்கிறேன். எனினும் எதிர்பார்க்கப்படும் புள்ளி களை என்னால் பெறமுடியாமல் இருக்கிறது. இது எனக்கு கவலையளிப்பது ஒரு புறமிருக்க, நான் பெறும் புள்ளி கள் குறைவாக இருப்பதால் என்னுடைய தந்தையும் என்னை தொடர்ந்தும் திட்டித் தீர்க்கிறார். இதனால் எனக்குப் பரீட்சை பற்றிய கவலையும் பதட்டமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கவலைக்குரிய விடயம் என்னவென்றால், கடைசியாக இரு பாடங்களில் பரீட்சை நடைபெற்றது. அதில் நான் குறிப்பிட்ட ஒரு பாடத்தில் சித்திபெறத் தேவையான புள்ளிகளைப் பெற வில்லை. மற்றைய பாடத்தில் 60 புள்ளிகளைப் பெற்றிருக்கி றேன். இந்தப் பரீட்சைக்காக கடுமையாகப் படித்தேன். தாராள மான விடயங்களை மனனமிட்டேன். பரீட்சையைத் திறம்பட எழுத என்னால் இயலுமான முயற்சிகளை மேற்கொண்டேன். இருப்பினும் மேற்கூறப்பட்ட புள்ளிகளையே என்னால் பெற முடியுமாக இருந்தது. இதற்கான காரணம் என்ன என்பதை இன்னும் என்னால் விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது.

குறித்த பரீட்சையில் நான் எழுதிய விடைகள் தொடர்பாக எனக்கு நம்பிக்கையும் உறுதியும் இருந்தது. பெறுபேற்றைக் கண்டதும் நான் பெற்ற புள்ளிகளை இட்டும் நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். அதன் பின்னர் எந்தவொரு முயற் சியையும் மேற்கொள்ள இயலாமல் இருக்கிறது. நான் விடை எழுதும் போது அடிக்கடி பதட்டம், பயம் ஏற்படுவதுடன் கவலைக்குள்ளாக்கிறேன்.

நான் வீட்டுப் பயிற்சிகளைச் செய்கிறேன், சுய கற்றலை மேற்கொள்கிறேன். கடந்த கால மற்றும் மாதிரி வினாக்களுக்கு விடையளித்துப் பார்க்கிறேன். இருப்பினும் இறுதியில் பரீட் சையில் குறைவான புள்ளிகளையே பெறுகிறேன். ஆனால், என்னுடைய நண்பர்கள், என்னைவிட சொற்பமான அளவே பாடங்களை மீட்டுகின்றனர். எனினும் என்னைவிட அதிகமாகப் புள்ளிகள் பெறுகின்றனர்.

இந்த விடயம் என்னில் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. என்னுடை வாழ்க்கையில் அதிக பதட் டத்தையும் பதகளிப்பையும் ஏற்படுத்தி யிருக்கிறது. எவ்வளவு முயற்சி செய்தும் ஏன் நான் விரும்பும் புள்ளிகளைப் பெறமுடியாமல் இருக்கிறது? என்பதே எனது கேள்வி.

பதில் :

அன்புள்ள சகோதரரே! வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல் லாஹி வபரகாதுஹு.

உங்களுடைய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன்னர், ஒரு விடயத்தை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்றுள்ள அதிகமான மாணவர்கள் படிக்க வேண்டும் என்ப தற்காக தமது சுய விருப்பத்திற்கிணங் கவும் பிறரின் தூண்டுதல்களாலும் பல்வேறு முயற்சிகளை மேற்கொள் கின்றனர். ஆயினும் சிறந்த பெறுபேற் றைப் பெற்றுக்கொள்ளத் தவறுகின் றனர். உண்மை யாதெனில் ஒரு மனிதன் ஒரு விடயத்தை நாடி முயற்சியை மேற்கொண்டால் அதற்கான சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேறு கிடைக்க வேண்டும் என்பதை எதிர் பார்க்கிறான்.

உங்களைப் பொறுத்தவரை நீங்கள் பாடங்களை மீட்டுகிறீர்கள். முயற்சி செய்கிறீர்கள். இருப்பினும் உங்களுக்குக் கிடைக்கும் பெறுபேறு உங்களுடைய முயற்சிக்குப் பொருத்தமற்றதாகவே காணப்படுகிறது. நீங்கள் மேலே குறிப்பிட்ட விடயங்களை ஒட்டு மொத்தமாகத் தொகுத்து நோக்கும்போது நாம் விளங்கிக் கொள்ளக்கூடிய அம்சம் இதுவே. எனினும், இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் கட்டாயம் நினைவில் வைத்திருக்க வேண்டிய அம்சம், தயார் நிலையுடன் ஒரு பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்று சித்தியடைய வேண்டுமென்றால் மீட்டல் மற்றும் தொடர் முயற்சி என்பவற்றினூடாகவே சாத்தியப்படும். பாடங்களை மீட்டல், சிந்தனை ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையில் ஒழுங்குபடுத்தப்பட்டதாக அமைய வேண்டும். அவ்வாறு அமையும்போது அல்லாஹ் நாடினால் அதனுடைய பெறுபேறு எப்போதும் மிகச் சிறந்ததாக அமையும்.

பதட்டம், கவலை மற்றும் மனஅழுத்தம் என்பன உங்களை ஆட்கொண்டிருப்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடிகிறது. இந்தக் விடயங்கள் பாடங்களை மீட்டுதல் மற்றும் பாடங்களை ஞாபகப்படுத்த முயற்சி செய்தல் ஆகிய இரண்டையும் சுற்றிச் சூழ்ந்துவிட்டது. மேலும் இந்த அம்சங்கள் உங்களில் எதிர்மறையான தாக்கங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

உங்களுடைய முறைப்பாட்டிலிருந்து நான் அவதானித்த மற்றுமொரு அம்சம் தான் நீங்கள் உங்களுடைய சக்திக்கப்பால் நின்று முயற்சி செய்கிறீர்கள் என்பதாகும். அதாவது வாழ்க்கையின் ஏனைய விவகாரங்களைக் கருத்திற்கொள்ளாது மீட்டலுக்காக மாத்திரம் நீண்ட நேரத்தை ஒதுக்குவதைக் குறிப்பிடலாம். உடல் ஓய்வை வேண்டி நிற்கிறது. அதுபோலவே சிந்தனை மற்றும் அறிவு என்பனவும் ஓய்வை வேண்டி நிற்கின்றன. ஒரு மனிதன் எப்போதும் தன்னைத் தான் மகிழ்விக்க வேண்டும். பெரும்பாலும் உங்களுடைய வழிமுறைகளிலும் நேர ஒழுங்கமைப்புகளிலும் ஒழுங்கீனங்கள் இருக்கலாம்.

அன்புள்ள மாணவரே! என்னுடைய பணிவான உபதேசம் என்னவெனில் உங்களுடைய வாழ்க்கையில் இடம்பெற்ற விவகாரங்களை உதாரணமாக, இரண்டு பாடங்களில் ஒன்றில் 60 புள்ளிகளையும் அடுத்ததில் மிகக் குறைவான புள்ளிகளைப் பெற்றமையையும் எதிர்மறையான ஒரு விடயமாகப் பார்க்க வேண்டாம். அது நீங்கள் செய்த முயற்சியின் பெறுபேறுகளே. இவற்றை நீங்கள் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தி உங்களுடைய எதிர்காலத்தை நீங்களே தொலைத்து விடாதீர்கள்.

அதாவது, ஓய்வுக்காக ஒரு பகுதியை எடுத்துக் கொள்ளல், நேரத்தைத் தேவைக்கு ஏற்றவாறு ஒழுங்கு செய்து கொள்ளல், உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள காலநேரத்தோடு தூக்கத்துக்குச் செல்லல் போன்றன மிகச் சிறந்த வழிமுறைகளாகும். நேரத்தோடு தூங்கச் செல்வது, தேவையான நேரத்தில் பாடங்களை மீட்டுதல் போன்றவற்றிற்கு நேரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டால் ஒருபோதும் கஷ்டமான விடயமாக அமையாது.

உங்களுடைய பிரச்சினையிலிருந்து விடுபட உங்களிடமிருந்து ஒரு வேலைத்திட்டத்தை எதிர்பார்க்கிறேன். அதாவது நீங்கள் நாளாந்த வேலைத் திட்டங்கள் அடங்கிய ஒரு அட்டவணையைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இந்த அட்டவணை இயல்பானதாக அமைவதுடன் ஸுப்ஹுத் தொழுகையுடன் ஆரம்பிக்க வேண்டும். ஸுப்ஹுத் தொழுகையிலிருந்து பின்னர் பாடசாலைக்குப் போவதற்கு முன்னர் அண்ணளவாக இரண்டு மணித்தியாலங்கள் படிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதில் கஷ்டங்களை எதிர்நோக்குகின்ற அனைவரும் இவ்வழிமுறையைப் பின்பற்றுமாறு உபதேசிக்கிறேன். காரணம் இது ஒரு சிறந்த முறையாகக் காணப்படுகிறது. இந்நேரத்தில் மூளையானது வெறுமையாகவும் அமைதியான, நிம்மதியான நிலையிலும் காணப்படுகின்றது. இந் நிலையில் ஒரு மனிதன் வாசிக்கின்ற, ஞாபகப் படுத்துகின்ற விடயங்கள் மீண்டும் இலகுவாக ஞாபகத்திற்கு வரக்கூடியனவாக இருக்கின்றன.

நண்பர்களுடன் இணைந்து பாடங்களை மீட்ட முயற்சி செய்யுங்கள். ஒரு வாரத்தில் ஆகக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று சந்திப்புக்களையாவது ஏற்படுத்திக் கொள்ளுங்கள். குழுவாகச் சேர்ந்து பாடங்களை மீட்டுவது மிக முக்கியமான ஒன்றாகும். ஆனால் குழுவாக இணையக் கூடியவர்கள் சிறந்தவர்களாகவும் படிப்பதை நோக்கமாகவும் அதில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டியது முக்கிய அம்சமாகும்.

அடிக்கடி உளஅமைதிக்கான பயிற்சிகளை (Relaxation Exercise) மேற்கொள்ளுங்கள். இவ்வாறான பயிற்சிகள் மிக இன்றியமையாததாகும். இதற்காக சாதாரண மூச்சுப் பயிற்சி ஒன்றைச் செய்யலாம். அது பின்வருமாறு அமையலாம்:

(27ஆம் பக்கம் பார்க்க...)

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பகுதி Aயிலிருந்து ஐந்து வினாக்களையும் பகுதி Bயிலிருந்து ஐந்து வினாக்களையும் தெரிந்தெடுத்து பத்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவின் சரியான விடைக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்.
- கூம்பின் கனவளவு $1/3\ \pi r^2 h$
- உருளையின் கனவளவு $\pi r^2 h$

பகுதி A

01. குறித்த வியாபாரி ஒருவர் கொள்வனவு செய்த பொருளின் கொள்விலை, விற்றவிலை பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

பொருள்	கொள்விலை	எதிர்பார்த்த இலாபவீதம்	குறித்த விலை	கழிவு	விற்ற விலை
M	4,800	25%	6,000	10%	
N	6,000	20%	....	8%	

i. பொருள் M இற்கு எத்தனை ரூபா இலாபம் வைத்து விலை குறித்துள்ளார்? (2 புள்ளிகள்)

ii. பொருள் N இற்கு குறிக்கப்பட்டுள்ள விலையைக் காண்க. (3 புள்ளிகள்)

iii. பொருள் M இனை விற்றதன் மூலம் எவ்வளவு இலாபம் கிடைத்துள்ளது? (2 புள்ளிகள்)

iv. பொருள் N இனை விற்பதன் மூலம் அவர் அடையும் இலாபம் யாது? (3 புள்ளிகள்)

02. சார்பு $y=\left(x^2+x-6\right)$ இன் சார்பு x மாறும் விதத்திற்கேற்ப y மாறும் விதம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

x	-4	-3	-2	-1	0	1	2	3
y	6	0	....	-6	-6	-4	0	6

a) i. $x=-2$ ஆகும் போது y இன் பெறுமானம் யாது? (1 புள்ளி)

ii. வரைபை வரைக. (3 புள்ளிகள்)

b) i. சார்பின் இழிவுப் பெறுமானம் யாது? (1 புள்ளி)

ii. சமச்சீர் அச்சின் சமன்பாட்டினை எழுதுக. (1 புள்ளி)

iii. $y=x-1$ எனும் நேர்கோட்டினை நீர் வரைந்த வளையியின் மீது வரைக? (1 புள்ளி)

iv. $\sqrt{5}$ இன் பெறுமானத்தை உமது வரைபைப் பயன்படுத்திக் காண்க. (2 புள்ளிகள்)

c) x^2 இன் குணகம் 1 ஆகவும் x அச்சை -2 இலும் 3 இலும் வெட்டிச் செல்வதுமான வரைபின் இருபடிச்சமன்பாட்டினை காரணிகளின் பெருக்கமாகத் தருக.

03. i. தீர்க்குக $\dfrac{3}{(a+2)}-\dfrac{2}{a}=\dfrac{1}{7a}$

ii. $(2x+6)cm$ நீளம் $2x\ cm$ அகலமும் கொண்ட செவ்வகத் தகட்டிலிருந்து x cm பக்க நீளமுடைய சதுரமொன்று வெட்டி அகற்றப்படுகின்றது.



a) செவ்வகத்தின் பரப்பு யாது?

b) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு $18cm^2$ எனின் x இனால் $x^2+4x-6=0$ எனும் இருபடிச்சமன்பாடு திருப்தி செய்யப்படுகின்றது எனக் காட்டுக.

c) நிறைவர்க்கமாக்கல் அல்லது வேறு வழிகளில் x இன் பெறுமானத்தைக் காண்க. ($\sqrt{10}=3.17$ எனக் கொள்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. படத்தில் தரப்பட்டவாறு AD என்பது வீடும், BC யானது தொலைக்காட்சி Antenna கம்பமுமாகும்.



Antenna இன் அடி B யிலிருந்து வீட்டின் உச்சி D யின் ஏற்றக்கோணம் $37^0 12'$ C யிலிருந்து A இற்கான இறக்கக்கோணம் 61^0 ஆகவும் $CB = 40m$ ஆகவும் காணப்படின்,

i. x இல் அமைந்த இரு சமன்பாடுகளைத் தருக. (3 புள்ளிகள்)

ii. A, B இற்கிடையிலான தூரத்தைக் காண்க. (4 புள்ளிகள்)

iii. AD யின் உயரம் யாது? (3 புள்ளிகள்)

05. இரண்டு T-Shirt இனதும் ஒரு Shirt இனதும் விலை ரூ. 1200 ஆகும். மூன்று Shirt இனது விலை நான்கு T-Shirt களின் விலைகளுக்குச் சமனாகும்.

i. T-Shirt இன் விலை x எனவும் Shirt இன் விலை a எனவும் கொண்டு ஒருங்கமை சமன்பாடுகளை உருவாக்குக. (2 புள்ளிகள்)

ii. அதைத் தீர்ப்பதன் மூலம் T-Shirt, Shirt இனது விலைகளை தனித்தனியே காண்க. (3 புள்ளிகள்)

b) i. காரணிப்படுத்துக. $2x^2 + 7x - 15$ (3 புள்ளிகள்)

ii. $A = \begin{bmatrix} -4 & 2 & 1 \\ 0 & 5 & -3 \end{bmatrix}$ $B = \begin{bmatrix} 3 & 4 & 2 \\ -1 & -1 & -1 \end{bmatrix}$ எனின்

தாயம் $2(A+B)$ இனைக் காண்க. (2 புள்ளிகள்)

06. குறித்த பாடசாலை மாணவர்கள் சிலர் இடைவேளையின் போது ஒரு நாளில் செலவு செய்யும் தொகை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

தொகை	5-15	15-25	25-35	35-45	45-55	55-65
மீடிறன் (f)	14	20	36	42	28	20

i. உணவு உட்கொண்ட மாணவர்களின் மொத்த தொகை யாது? (1 புள்ளி)

ii. ஒரு மாணவர் செலவு செய்த தொகையின் இடைப்பெறுமானத்தை கிட்டிய ரூபாவில் தருக. (5 புள்ளிகள்)

iii. 20 பாடசாலை நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் 1 மாணவனின் செலவினைக் காண்க. (2 புள்ளிகள்)

iv. மாணவர்கள் வீட்டிலிருந்து உணவை எடுத்து வந்திருந்தால் ஒரு நாளைக்கு ரூ. 25 மாத்திரமே செலவாகி இருக்கும் எனின் மேற்குறித்த மாதத்தில் அம்மாணவர்கள் ரூ. 38000 இலும் அதிகமான தொகையினை அவர்கள் சேமித்திருக்கலாமென கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் தெரிவித்தார். இக்கூற்று உண்மையானதா? காரணம் தருக. (2 புள்ளிகள்)

பகுதி B

07.



a) உருவில் இழை ஒன்றில் குண்டொன்று கட்டப்பட்டுள்ளது. இக்குண்டானது ஆட்டிவிடப்பட்ட போது A யிலிருந்து B யை நோக்கி $84cm$ தூரம் சென்று மீண்டும் A யை நோக்கி $78cm$ தூரம் வந்து மீண்டும் B யை நோக்கி $72cm$ தூரம் என்ற ஒழுங்கில் தூரங்கள் குறைவடைந்து சென்றன.

i. இரண்டு அசைவுகளுக்கிடையில் எத்தனை cm தூரம் குறைவடைகிறது? (1 புள்ளி)

ii. 7வது அசைவின் போது எத்தனை cm தூரம் பயணம் செய்யும்? (2 புள்ளிகள்)

iii. எத்தனையாவது அசைவின் போது அது $36cm$ தூரம் செல்லும்? (2 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. 14வது அசைவின் பின் அது ஓய்வுக்கு வருமாயின் அது மொத்தமாகப் பயணம் செய்த தூரத்தினை m இல் தருக. (2 புள்ளிகள்)

b) முதல் உறுப்பு 1458 ஆகவும் பொதுவிகிதம் 1/3 ஆகவும் உள்ள பெருக்கல் தொடரின் 5ம் உறுப்பைக் காண்க. (2 புள்ளிகள்)

08. i. $AB = 7cm, AC = BC = 5cm$ ஆகுமாறு ABC யை அமைக்க. (3 புள்ளிகள்)

ii. AB, AC என்பவற்றிலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கினை வரைக. (2 புள்ளிகள்)

iii. AB யை B யில் தொடுவதும் நீர் வரைந்த ஒழுக்கில் மையத்தைக் கொண்டதுமான வட்டம் ஒன்றை வரைக. (2 புள்ளிகள்)

iv. AC யை மேலும் $2cm$ நீட்டினால் அக் கோடு வட்டத்தைத் தொடும் காரணம் தருக. (2 புள்ளிகள்)

v. அது வட்டத்தைத் தொடும் புள்ளியை D எனக் கொண்டு D இனூடாக AB ற்கு சமாந்திரமாக கோடு DE யை வரைக. இங்கு E ஆனது நீர் வரைந்த (வினா ii இல்) ஒழுக்கில் உள்ளது. (2 புள்ளிகள்)

09. அடியின் விட்டம் $10a$ உம் உயரம் $6a$ உம் உடைய திண்ம உருக்குச் செங்கூம்பு ஒன்றிலிருந்து $4a$ விட்டமும் $3a$ உயரமுடைய உருளையொன்று வெட்டி அகற்றப்படுகின்றது.



i. ஆரம்பத்தில் காணப்பட்ட கூம்பின் கனவளவு $50\pi a^3$ எனக் காட்டுக.

ii. எஞ்சிய பகுதியின் கனவளவைக் காண்க.

iii. அகற்றப்பட்ட உருளையின் பரப்பினை π, a சார்பில் தருக.

iv. அகற்றப்பட்ட உருளையினைப் பயன்படுத்தி உலோகம் வீணாகாதவாறு a விட்டமுடைய சிறிய கோளங்கள் எத்தனை செய்யலாம் எனக் காண்க.

10. உருவில் QS ன் நடுப்புள்ளி O ஆகும்.



i. தரவுகளை உமது விடைத்தாளில் பிரதி செய்க. (1 புள்ளி)

ii. $PO = OR$ ஆகுமாறு PO வை R வரை நீட்டுக. இதிலிருந்து $PQRS$ ஒரு இணைகரம் எனக் காட்டுக. (3 புள்ளிகள்)

iii. $P\hat{Q}S = P\hat{S}Q$ எனின் இந்த இணைகரத்தின் விஷேட பெயரினைத் தருக. (காரணம் தருக.) (2 புள்ளிகள்)

iv. $S\hat{O}R$ இன் பெறுமானம் யாது? (2 புள்ளிகள்)

v. ΔPQR இன் பரப்பளவிற்குச் சமமான முக்கோணியின் பெயர் யாது? (2 புள்ளிகள்)

11. முன்னணி நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் ஊழியர்களிடம் காணப்பட்ட iPad, Note Pad பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.



i. நிழற்றப்பட்ட பிரதேசத்தை விபரிக்க. (2 புள்ளிகள்)

ii. Note pad வைத்திருந்த ஆண்கள் 20 பேர் எனின் இவை இரண்டும் வைத்திருந்த ஆண்கள் எத்தனை? (2 புள்ளிகள்)

(41ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 தர மாணவர்களுக்கு

விஞ்ஞானம்



ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

அமுக்கம், மேலுதைப்பு	தரம் 10	பௌதிகவியல்

- ஓர் அலகு மேற்பரப்பின் மீது செங்குத்தாகத் தாக்கும் சராசரி விசை அமுக்கம் எனப்படும்.
- விசை தொழிற்படும் பரப்பு அதிகரிக்க அமுக்கம் குறைவடையும். இதன் பயன்களாவன;
  1. பயணப்பைகளின் தோற்பட்டி அகல மாகக் காணப்படல்.
  2. வாகனத்தை உயர்த்தும் யாக்கின் கீழ் பலகை வைக்கப்படல்.
  3. முதுகில் வைத்து பொதிகளைச் சுமத்தல்.
  4. கட்டடங்களின் அத்திவாரம் அகலமாக அமைக்கப்படல்.
- விசை தாக்கும் பரப்பளவைக் குறைக்க கூடியளவு அமுக்கம் ஏற்படும். இதன் பயன்கள்;
  1. கத்தி, ஆணிகளின் வெட்டும் பகுதிகள் கூர்மையாக்கப்படுதல்.
  2. ஆப்புகளின் முனைப் பகுதி கூர்மையாக இருத்தல்.
  3. சவர்க்காரத்தை நூலினால் வெட்டுதல்.

01. $100cm^2$ பரப்பொன்றில் செங்குத்தாக 125 N விசை தாக்கும் போது ஏற்படக்கூடிய அமுக்கம் யாது?

விசை = 125 N

பரப்பு = $100cm^2 = \frac{100}{100\times100}m^2 = 0.01m^2$

அமுக்கம் = $\frac{\text{விசை}}{\text{பரப்பு}}$

$= \frac{125}{0.01} = 12500Nm^{-2}(Pa)$

திரவ அமுக்கம்

- திரவங்களினால் ஏற்படும் அமுக்கத்தின் இயல்புகள் பின்வருமாறு:
  1. அமுக்கம் எல்லாத் திசைகளிலும் தொழிற்படும்.
  2. ஆழம் கூடக் கூட அமுக்கம் கூடிச்செல்லும்.
  3. ஒரே ஆழத்தில் வெவ்வேறு புள்ளிகளில் அமுக்கம் சமனாகும்.
  4. திரவ அடர்த்தி வேறுபட அமுக்கம் மாறும்.
- திரவங்களில் குறித்த ஆழத்தில் நிலவும் அமுக்கத்திற்கான சமன்பாடு:

$$P = h\rho g$$

h = திரவ ஆழம் ρ = திரவ அடர்த்தி
g = புவியீர்ப்பு ஆர்முடுகல்

02. உவர்நீரைக் கொண்ட ஏரியொன்றில் குறித்த தொரு இடத்தின் ஆழம் 50m ஆகக் காணப்பட்டது. இதன் அடியில் ஏற்படும் அமுக்கம் யாது?

(உவர் நீரின் அடர்த்தி $=1200kgm^{-3}$, $g=10ms^{-2}$ எனக் கொள்க)

திரவ அமுக்கம் $P = h\rho g$

$= 50\times1200\times10$

$= 600\,000Pa$

03. திரவ அமுக்கத்தின் அடிப்படையில் தொழிற்படும் பொறிகள் சில தருக.

நீரியல் யாக்கு, நீரியல் அழுத்தி, வாகன நீரியல் தடுப்புத் தொகுதி

வாயு அமுக்கம்

- வாயுக்கள் நிறையைக் கொண்டிருப்பதனால் அதனால் அமுக்கம் ஏற்படும்.
- புவியின் மேலுள்ள வளிமண்டலத்தின் நிறையினால் எல்லாப் பொருள்களின் மீதும் அமுக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தப்படும். இதுவே வளிமண்டல அமுக்கம் எனப்படும்.

- வளிமண்டல அமுக்கத்தை அளவிடப் பயன் படும் உபகரணம் பாரமானி எனப்படும். பார மானிகளில் இரசப் பாரமானி, திரவமில் பார மானி என்பன உள்ளன.
- கடல் மட்டத்தில் வளி அமுக்கம் 76cm உயர முடைய இரசத்தின் அமுக்கத்திற்குச் சமனாகும்.



04. i. கடல் மட்டத்தில் வளிமண்டல அமுக் கத்தின் அளவைக் காண்க. (இரச அடத்தி $= 13600 kgm^{-3}$, $g = 9.8 ms^{-2}$)

$$p = h\rho g$$

$$= \frac{76}{100} \times 13600 \times 9.8$$

$$= 101\,292.8 Nm^{-2}$$

$$= 1.012 \times 10^5 Nm^{-2} \quad \underline{\Omega} \quad 1 \times 10^5 Pa$$

ii. மலைப் பிரதேசங்களில் இரச உயரம் 76cmஐ விட குறைவாக இருக்கும். இதன் காரணம் யாது?

புவியின் மேல் நோக்கிச் செல்ல வளி அமுக்கம் குறைவடைந்து செல்லும்.

iii. ஆகாய விமானங்களில் இரசப் பாரமானி யைப் பயன்படுத்துவது சிரமமானது என் பதற்கான காரணம் யாது?

பெரிய உபகரணம் தேவை, இரசம் வெளியேறக்கூடும்.

iv. வளிமண்டல அமுக்கம் பயன்படும் சந்தர்ப்பங்கள் சில தருக.

⇨ பருகு குழாயினூடாக பானத்தை உறிஞ்சிக் குடித்தல்.

⇨ இறையிகள் மூலம் உயரத்திலிருந்து தாழ்ந்த பகுதிக்குத் திரவத்தைக் கடத்துதல்.

⇨ உறிஞ்சி பற்றி கண்ணாடியில் ஒட்டிக் கொள் ளுதல்.

⇨ ஹெயர் ஆய்கருவி மூலம் திரவங்களின் சார டர்த்தியைத் துணிதல்.

⇨ மருந்து புகுத்தி, சைக்கிட் பம்பி என்பன தொழிற்படல்.

மேலுதைப்பு (Upthrust)

- திரவம், வாயுக்களில் ஒரு பொருள் இருப்பின் அதன் மீது திரவம், வாயுக்களினால் (பாயிகள்) அப்பொருள் மீது அமுக்கம் தோற்றுவிக்கப் படும். இவ்வமுக்கத்தினால் ஏற்படும் விளைவு மேலுதைப்பாகும்.
- திரவத்தினுள் உள்ள பொருள் மிதப்பதற்கும் அல்லது அதன் நிறை குறைவடைவதற்கும் காரணம் அதன் மீது ஏற்படும் மேலுதைப்பு ஆகும்.

05. மிதத்தல் தொடர்பான ஆக்கிமிடீசின் தத்து வத்தை எழுதுக.

ஓய்விலுள்ள பாயியொன்றினுள் ஒரு பொருள் பகுதியாகவோ முழுமையாகவே அமிழ்ந்துள்ள போது பொருளின் மீது ஏற்படுத்தப்படும் மேலுதைப்பானது பொருளினால் இடம் பெயர்க்கப்படும் பாயியின் நிறைக்குச் சமனா கும்.

06. பொருள் மீது ஏற்படும் மேலுதைப்பைக் கண் டறிய மேற்கொண்ட பரிசோதனை அமைப்பு கீழ்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ளது.



யுரேக்காக் கிண்ணம்

i. பொருளின் உண்மை நிறை யாது?

ii. பொருளின் தோற்ற நிறை யாது?

iii. பொருளில் ஏற்படும் மேலுதைப்பைக் காண்க.

iv. முகவையில் இடம்பெயர்க்கப்பட்ட திரவத்தின் நிறை யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிகளின் இனப்பெருக்கம்	தரம் II	உயிரியல்

- அங்கிகள் இறக்க முன்னர் தம்மைப் போன்ற புதிய அங்கியொன்றை உருவாக்கும் செயற்பாடு இனப்பெருக்கம் எனப்படும். இது புவியில் அங்கி இனங்கள் அழிவடையாது தொடர்ச்சியாக நிலைத்திருக்க உதவுகிறது.

தாவர இனப்பெருக்கம்

- தாவரங்களில் பின்வரும் இரு வகை இனப்பெருக்கம் நடைபெறுகிறது.
  1. பூக்கள் எனும் இலிங்க அங்கங்களினூடாக இலிங்கமுறை இனப்பெருக்கம் நடைபெறுகிறது.
  2. பூ தவிர்ந்த ஏனைய பதியப் பகுதிகள் மூலமாக பதியமுறை (இலிங்கமில்) இனப்பெருக்கம் நடைபெறுகிறது.

01. தாவரங்களில் இலிங்க முறை இனப்பெருக்கத்தின் அனுகூலங்கள் எவை?
  1. புதிய இயல்புகளையுடைய தாவரங்கள் உருவாகும்.
  2. தாவரங்களின் கூர்ப்புச் செயன்முறை நிகழ இது உதவும்.
  3. நோய், பீடைத்தாக்கத்தினால் எல்லாத் தாவரங்களும் அழிவடையாது.

02. தாவர பதியமுறை இனப்பெருக்கத்தின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் எழுதுக.

அனுகூலங்கள்:
  1. தாய்த் தாவரத்தின் இயல்புகளை முற்றிலும் ஒத்த மகட்தாவரங்களைப் பெறலாம்.
  2. வித்துக்களற்ற தாவரங்களையும் இனப்பெருக்கம் செய்ய முடியும்.
  3. விரைவாக விளைச்சலைப் பெறமுடியும்.
  4. நோய்க்கு எதிர்ப்பியல்புடைய தாவரங்களை உருவாக்க முடியும்.

பிரதிகூலங்கள்:
  1. புதிய வர்க்கங்கள் உருவாகாமை.
  2. நோய்கள், பீடைத்தாக்கங்களினால் அதிக சேதம் ஏற்படும்.

03. தாவரங்களின் பதியமுறை இனப்பெருக்கக் கட்டமைப்புகளையும் அவற்றிற்கான தாவர உதாரணங்களையும் எழுதுக.
  1. இலைகள் - சதைகரைச்சான், பெகோனியா
  2. வேர்கள் - வில்வம், ஈரப்பலா, கறிவேப்பிலை, வலன்ரைன் தாவரம்
  3. குமிழம் - இராசவள்ளி, மோத கவள்ளி
  4. ஓடிகள் - வல்லாரை, வற்றாளை, சிறுபுல்லடி, இராவணன்மீசை
  5. நிலக்கீழ்த் தண்டுகள்:
     - ⇨ வேர்த்தண்டுக் கிழங்கு - இஞ்சி, மஞ்சள், வாழை
     - ⇨ தண்டுக் கிழங்கு - சேம்பு, கருணைக் கிழங்கு
     - ⇨ தண்டு குமிழ் - உருளைக்கிழங்கு, இன்னலக்கிழங்கு
     - ⇨ குமிழ் - வெங்காயம், வெள்ளைப்பூடு

04. தாவரங்களில் மேற்கொள்ளப்படும் செயற்கைப் பதியமுறை இனப்பெருக்க முறைகள் எவை?
  1. தண்டுத் துண்டங்களை வளரச்செய்தல்
  2. பதிவைத்தல்
  3. ஒட்டுதல்
  4. இழையவளர்ப்பு, கலவளர்ப்பு

- தாவர இலிங்கமுறை இனப்பெருக்கத்தில் மகரந்தச் சேர்க்கை, கருக்கட்டல், பழம் உருவாதல் எனும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.
- பூவொன்றின் முதிர்ந்த மகரந்த மணிகள் அதே இனப்பூவின் குறியை அடைதல் மகரந்தச் சேர்க்கை எனப்படும். இதில் விலங்குகள், காற்று, நீர் எனும் காரணிகள் உதவுகின்றன.
- குறியில் விழும் மகரந்தமணி முளைத்து சூலகத்தை நோக்கி வளரும். இதன்போது ஆண் புணரிக்கரு முட்டைக்கலக் கருவுடன் இணைதல் கருக்கட்டல் எனப்படும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் கணினிப் பொறியியலாளர்

அரபா கரீம்

கடந்த 2012 ஜனவரி 14ம் திகதி பாகிஸ்தான் மக்களை கவலையில் ஆழ்த்திய தினம். முக்கிய செய்தியாக அந்நிகழ்வு உலகின் பல செய்தி நிறுவனங்களில் ஒளிபரப்பப்பட்டது. அது ஓர் இளம் சாதனையாளர் மரணித்த தினம். பாகிஸ்தான் அரசு அவரது ஜனாஸாவின் மீது அரச கொடியை போர்த்தி அவரை கௌரவித்தது. அரச தலைவர்களும் உயர் அதிகாரிகளும் அந்த துயரத்தில் கலந்து தனது கவலையை வெளிப்படுத்தினர். மைக்ரோசொப்ட் நிறுவுனர் பில்கேட்ஸ் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருந்தார்.

அந்த இளம் சாதனையாளர்தான் அரபா கரீம் ராந்தவா. இவர் இராணுவ வீரரான அம்ஜத் கரீம் ராந்த வாவின் சாதனை மகள். 1995 பெப்ரவரி 02 இல் பைஸலாபாத்தில் உள்ள Ram Dewali இல் பிறந்து வளர்ந்து, லாகூர் கிரம்மர் பாடசாலையில் கல்வி கற்றார்.

தற்போது 18 வயதுடைய இவர், தனது 9ஆவது வயதில் 20-30 வயது எம்.பி.ஏ, எம்.சீ.சி, பி.ஏ, மாணவர்கள் பங்கு பற்றும் கணினி மென்பொருள் அபிவிருத்தி மற்றும் தகவல் தொழிநுட்ப துறைசார் வல்லுனர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் Microsoft Certificated Professional (MCP) என்ற மாணவர்களது கணிதத் திறன், ஆங்கில நுண்ணறிவு, தொழிநுட்ப முறைகளில் தீர்வு காணும் திறன், பிரச்சினைகளை தீர்ப்பது, முடிவுகளை எடுப்பது போன்ற அடிப்படையில் நடந்த பரீட்சையில் (MCC) விருதை பெற்றுக் கொண்டார். இவ்விருதை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறுவுனர் பில்கேட்ஸிடமிருந்து பெற்றுக் கொண்டார். இந்த விருதை பெறும் போது மைக்ரோசொப்ட் விருதை பெறும் இளம் வயதுச் சிறுமி எனும் பாராட்டு இவரை வந்தடைந்தது. "என் வயதிலுள்ள புத்திசாலிகளை ஏன் நீங்கள் வேலைக்கு சேர்க்கக் கூடாது?" என பில்கேட்ஸிடம் இவர் வினவியது முக்கிய அம்சமாகும்.

இவரது சாதனையை இந்திய சிறுமி ஒருவர் எட்டிய போது, அது பற்றி அவரிடம் கேட்கப்பட்டது. "சாதனை என்பது முறியடிக்கத்தான். வளர்ந்து வரும் நாடுகளின் இப்படிப்பட்ட திறமைசாலிகள் இருக்கின்றனர் என மேற்கு நாடுகள் தெரிந்து கொள்ள வேண்டும்" என பெருமனதுடன் கூறினார்.

விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப பிரிவுகளுக்கு வழங்கப்படும் பாத்திமா ஜின்னா தங்கப் பதக்க விருது 2005இல் பிரதமர் Shaukath Aziz இனால் வழங்கப்பட்டதுடன் Salam Pakistan Youth Award என்ற விருதையும் பாகிஸ்தான் ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டார். இவர் நன்றாக பாடல்கள் மற்றும் கவிதைகளை இனிய குரலுடன் பாடக்கூடியவர் என்பதாக இவரது தந்தை தெரிவிக்கிறார்.

இவர் தனது மரணத் தருவாயில் புரட்சிக் கவிஞர் அல்லாமா இக்பாலின் கவிதைகளை கேட்டுக் கொண்டே இருந்தாதகக் குறிப்பிடப்படுகிறது. இவரது ஞாபகமாக லாகூர் தொழிநுட்ப பூங்காவிற்கு 2012 ஜனவரி 15ம் திகதி அரபா மென்பொருள் தொழிநுட்ப பூங்கா என அமைச்சர் Shahbaz பெயர் சூட்டியதுடன் கராச்சியின் தகவல் தொழிநுட்ப ஊடக நகர், "அரபா கரீம்" தொழிநுட்ப ஊடக நகர் எனவும் பெயர் மாற்றப்பட்டது.

"அரபா வயது கடந்த ஒரு திறமைசாலி. அவரது பேரார்வமும், தூரநோக்கும் ஒவ்வொரு இளம் நபருக்கும் ஆச்சரியமானது" என பாகிஸ்தான் மென்பொருள் சங்கத் தலைவர் Jehaarea புகழ்மாலை சூடினார்.

இவரிடமிருந்து நாம் கற்கும் பாடங்கள்

- சாதனை படைப்பதற்கு வயது ஒரு தடையில்லை. எந்த வயதிலும் சாதனை புரிய முடியும்.
- நம் நண்பர்களது திறன்களை மதிக்கும், கௌரவிக்கம், ஊக்குவிக்கும் பண்பு ஒரு சாதனையாளரின் அழகிய முன்மாதிரியாகும்.
- நாம் எவ்வளவு காலம் வாழ்வோம் என்பது முக்கியமல்ல, நாம் வாழ்ந்த காலத்தினுள் எதனை சாதித்தோம் என்பதே முக்கியமானது.
- சாதனை வீரர்களின் நூல்களை, எழுத்துகளை, கருத்துகளை நாம் விரும்பி படிக்கும் போது இயல்பாக எம்மிலும் சாதனை உணர்வு உதிக்கும்.
- இலட்சியங்களோடு வாழும் போதுதான் சாதனை படைப்பது இலகுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

கீழ் காணப்படும் கதைக்கு அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொற்களுக்குக் கோடிடுக.

(1) (ஒரு, ஓர்) நாள் (2) (கொக்கொன்று, பூனையொன்று) குளக்கரைக்குச் சென்றது. அங்கே ஒரு (3) (எலியை, மீனை)க் கண்டது. அருமை நண்பா அங்கே நின்று என்ன பார்க்கிறாய் கரைக்கு வா சேர்ந்து விளையாடலாம் என்றது. ஆஹா! என்ன அருமையான பாசம் நான் கரைக்கு வர நீ (4) (சீறிப், கூவி)ப் பாய, எனது உயிர் போக வேண்டாமப்பா இந்த விளையாட்டு நீ (5) (எலியை, மீனை) மட்டுமா உண்கிறாய் என்னையுமல்லவா உண்கிறாய். உனது பாசத்திற்கு நன்றி போய்வருகிறேன்.

பின்வரும் படத்தை அவதானித்து பொருத்தமான தரவுகளுக்குக் கோடிடுக.

6.

i. பணம் பத்தும் செய்யும்.

ii. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.

iii. பணம் பாதாளம் வரை பாயும்.

7.

i. மாதா, பிதா, குரு, தெய்வம்.

ii. குருதட்சணை வேண்டுபவர்.

iii. ஆனைக்கும் அடி சறுக்கும்.

8.

i. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

ii. கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்.

iii. கண் இருந்தும் காணா தவன் போல.

கட்டங்களில் காணப்படும் சொற்களை வைத்து ஆக்க முடியாத வாக்கியம்.

அன்னையும்	தெய்வம்	பேண்	பாப்பா	
துணை	கல்வி	ஒழுக்கம்	மேலானது	பிதாவும்
உயிரிலும்	திக்கற்றவனுக்கு	நமக்குத்		
இன்றேல்	வேண்டாம்	சொல்ல	ஒருவரையும்	
பொல்லாங்கு	இல்லை.			

9. i. அன்னையும் பிதாவும் நன்னெறி தெய்வம்.
   ii. ஒழுக்கம் பேண்.
   iii. ஒழுக்கம் இன்றேல் கல்வி இல்லை.

10. i. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
    ii. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை.
    iii. தெய்வம் நமக்குத் துணை பாப்பா.

கோடிட்ட சொற்களுக்கு அதே கருத்தை புலப்படுத்தும் சொல்லுக்கு கோடிடுக.

11. காற்றோடு கலந்து வந்த <u>சுகந்தம்</u> மனதிற்கு இதமாய் இருந்தது.
    i. தூசு ii. துர்நாற்றம்
    iii. வாசனை

12. அக்கானகத்தில் <u>அரிகள்</u> பல வாழ்ந்தன.
    i. சிங்கங்கள் ii. புலிகள்
    iii. குள்ளநரிகள்

13. பெண்கள் சிலர் கூடி <u>மாதர்</u> சங்கம் அமைத்தனர்.
    i. மனிதர்கள் ii. அபிவிருத்திச் சங்கம்
    iii. பெண்கள்

14. உன் கண்ணில் நீர் வடிந்தால் என் கண்ணில் <u>உதிரம்</u> கொட்டுதடி.
    i. கண்ணீர் ii. செந்நீர்
    iii. பன்னீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மெய் வருத்தம் பாராது மாணவர்கள் கல்வி கற்றனர்.

i. உண்மை ii. உடம்பு

iii. நோய்

16. உருவில் உள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?

i. துலாம்

ii. தேன்

iii. பெருநாய்

iv. கலப்பை

17. இக்குறியீட்டுக்குப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்க.



i. பாதைகள் பிரியும் சந்தி

ii. பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை

iii. பாலங்கள் அமைக்கும் அதிகார சபை

மிகவும் நெருங்கிய தொடர் உள்ள உருச் சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.

18.



i.



ii.



iii.



iv.

19.



i.



ii.



iii.



iv.

தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.

20. தாவர உண்ணியாகக் கருதப்படும் இரண்டு விலங்குகள்.



A

B

C

D

E

i. Bயும் Eயும் ii. Aயும் Eயும்

iii. Bயும் Cயும்

21. அனைத்தும் உண்ணியாகக் கருதப்படுவது.

i. Bயும் Cயும் ii. Cயும் Dயும்

iii. Eயும் Aயும்

P

Q

R

S

T

22. P, R ஆகிய இரண்டையும் ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்தும் இயல்பு யாது?

i. இறைச்சியை மட்டும் உணவாகக் கொள்ளல்

ii. வீடுகளை அண்டி வாழும்

iii. நீர்நிலைகளில் காணக்கூடியதாக இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. Q, S ஆகியவற்றில் காணப்படும் விஷேட தன்மை யாது?

i. இரவில் கூடுதலாக நடமாடும்
ii பழங்களை உணவாகக் கொள்ளல்
iii. நீரை அண்டி வசித்தல்

24. Aயிற்கும் Bயிற்கும் பதிலாக மிகப் பொருத்த மான சொற்சோடியைத் தெரிவு செய்க.

தானியம்	கிழங்கு	A
B	கரட்	ஏயல்
பயறு	பீட்றூட்	கறுவா

i. கோவா, மா
ii. கறிவேப்பிலை, கடலை
iii. வாசனைச்சரக்கு, சோளம்

25. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.





i. ii. iii.

26.

10	14	11
12	13	10
13	11	11
10	11	....

i. 14
ii. 13
iii. 11

27. இலங்கைக்கே உரிய ஊருடக வாழி யாது?

i. நீர்க்காகம் ii. முதலை iii. ஆமை

28. வெசாக் பூ பூக்கும் மாதம் எது?

i. வைகாசி மாதம் ii. தை மாதம்
iii. சித்திரை மாதம்

29. சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த ஒரு நகரம்.

i. பலாங்கொடை iii. பதுளை
iii. களுத்துறை

30. கொழும்பில் இருந்து காலி வரையுள்ள புகை யிரதப் பாதையில் இருக்கும் ஒரு புகையிரத நிலையம்.

i. கண்டி ii. அளுத்கமை
iii. நீர்கொழும்பு

31. திருகைக்கல் பின்வரும் எத்தொழிலுக்குப் பயன் படுத்தப்படுகிறது?

i. தானியங்கள் இடிப்பதற்கு
ii. தானியங்கள் அரைப்பதற்கு
iii. எண்ணெய் எடுப்பதற்கு

32. வனைச்சில்லு பயன்படுத்துவது.

i. விவசாயக் கைத்தொழிலில்
ii. உலோகக் கைத்தொழிலில்
iii. மட்பாண்டக் கைத்தொழிலில்

33. உடலிற்குத் தேவைப்படும் விற்றமின்களைப் பெறுவதற்கு உகந்த உணவு.

i. பழங்கள் ii. தானியங்கள்
iii. முட்டை

34. வரலாற்று இடங்களில் ஒன்றான தலதா மாளிகை அமையக் காரணகர்த்தாவாக இருந்தவர்.

i. 1ம் விமலதர்ம சூரியன்
ii. 4ம் பாக்கிரமபாகு
iii. மகாசேனன்

35. இலங்கையில் மிக நீளமான பாலம்.

i. கிண்ணியா பாலம்
ii. களனிகங்கை பாலம்
iii. மல்லம்பிட்டி பாலம்

36. 2012ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் ஒகஸ்ட் 1ம் திகதி வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

i. 180 ii. 182 iii. 183

37. உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கையும் செவ்வகங்களின் எண்ணிக்கையும் முறையே



i. 3, 3 ஆகும்.
ii. 5, 4 ஆகும்.
iii. 3, 5 ஆகும்.

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. அடைப்பில் உள்ள மிகப் பெரிய சதுர எண்ணை மிகச் சிறிய ஒற்றை எண்ணால் பெருக்கும் போது கிடைக்கும் விடை.

12	9	16	8	12	36	13
18	20	5	10	25	7	11

i. 125 ii. 180 iii. 100

உருவில் உள்ள உபகரணம் யாது?

39. 

i. கரப்பு
ii. மடி
iii. அந்தாங்கு
iv. பறி

40. 

i. மின்மோட்டார்
ii. மின்மணி
iii. தைனமோ
iv. மின்காந்தம்

பின்வரும் இரு சொற்களை அவதானித்து மூன்றாவது சொல்லை இனங்கண்டு கீறிடுக.

41. காது, கூத்து ....

(வாத்து, காசு, சாம்பல்)

42. சைக்கிள், ..., வான்

(முச்சக்கர வண்டி, புகையிரத வண்டி, இயந்திரப் படகு)

43. ஒட்டி உறவாடி, ஆடி அசைந்து, ...

(கல கல, மேலே மேலே, சாக்குப் போக்கு)

44. ஆகாயம், ஏணி, ...

(கொடி, அத்தை, மேகம்)

45. மந்தி, பெட்டை, ...

(கடுவன், பிணை, ஏரி)

சரியான விடைக்குக் கோடிடுக.

46. திருக்குறளில் ஒன்று

i. இல்லறமல்லது நல்லறமன்று
ii. தன்வினை தன்னைச்சுடும்.
iii. நன்றி மறப்பது நன்றன்று

47. உயர்திணை, தன்மை, பன்மை கொண்ட வாக்கியமல்லாதது.

i. நாங்கள் சுற்றுலா செல்வோர்.
ii. எருது வயலை உழுதது.
iii. நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வோம்.

48. ஒற்றைக்காலில் நிற்பது என்ற மரபுத் தொடரின் கருத்து.

i. விடாப்பிடியாக நிற்பது
ii. இன்னுமொரு காலை தூக்கி நிற்பது
iii. சாதனை படைப்பதற்காக நிற்பது

49. ஒன்றன்பால் சொல்லில் ஒன்று.

i. ஆசிரியை ii. தேனீ
iii. கடவுள்

50. ஆயுத எழுத்தின் எண்ணிக்கை.

i. 12 ii. 18 iii. 1

விடைகள்

1. i	11. iii	21. ii	31. ii	41. iii
2. ii	12. i	22. iii	32. iii	42. i
3. ii	13. iii	23. i	33. i	43. iii
4. i	14. ii	24. iii	34. i	44. iii
5. i	15. ii	25. ii	35. iii	45. ii
6. ii	16. i	26. i	36. iii	46. iii
7. iii	17. ii	27. i	37. ii	47. ii
8. i	18. ii	28. i	38. ii	48. i
9. i	19. i	29. i	39. iii	49. ii
10. ii	20. ii	30. ii	40. ii	50. iii

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

ஈரைந்து மாதங்கள் சுமந்தாள்
ஈன்ற பொழுது பேரானந்தம் அடைந்தாள்
பாலூட்டி சீராட்டி வளர்ந்தாள்
பிணி தீர பணியாற்றி நின்றாள்

பள்ளிப்பாடம் சொல்லித் தந்தாள்
பல்கலைக்கழகமும் சென்றிட வழிகாட்டிச் சென்றாள்
பண்பெனும் பாதையில் தடம்பதிக்கச் செய்தாள்
பார் போற்றும் உத்தமனாய் உருவாக்கிச் சென்றாள்

1. பின்வரும் பாடல் யாரைப் பற்றியது?
   i. ஆசிரியர் ii. தாய்
   iii. பிதா
2. பேரானந்தம் என்பதை பிரித்தெழுதினால்
   i. பெரிய +ஆனந்தம்
   ii. பேர்+ ஆனந்தம்
   iii. பெருமை+ ஆனந்தம்
3. பாடலில் இடம்பெற்ற பெயரும் வினையுமாக வந்த சொல்.
   i. பார் ii. ஈரைந்து
   iii. பாலூட்டி
4. ஒரு குழந்தை பிறப்பதற்கு முன் தாயின் வயிற்றில் எத்தனை மாதங்கள் இருப்பதாக பாடல் குறிப்பிடுகின்றது.
   i. ஐந்து ii. ஒன்பது
   iii. பத்து
5. பாடலில் இடம்பெற்ற வினையெச்சம் ஒன்று.
   i. அடைந்தாள் ii. பணியாற்றி
   iii. சொல்லி
6. பள்ளிப்பாடம் சொல்லித் தந்தாள் என்பதில் எழுவாய்.
   i. அன்னை ii. பள்ளி
   iii. பாடம்
7. பிணி என்பதன் ஒத்த பதம் ....
8. உத்தமன் என்பதன் எதிர்பாற் சொல் யாது? ....
9. வழிகாட்டிச் சென்றாள் என்பதை நிகழ்காலத்தில் எழுதுக. ....
10. பாடலில் இடம்பெற்ற காலப்பெயர் ஒன்று தருக. ....

பின்வரும் படங்களை ஆதாரமாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.



11. ஆதி காலத்தில் படை அணிகளில் பங்குபற்றிய விலங்குகள்.
    i. Aயும் Cயும் ii. Cயும் Dயும்
    iii. Hவும் Cயும்
12. முலையூட்டிகளாவன
    i. Gயும் Cயும் ii. Dயும் Fவும்
    iii. Hவும் Iயும்
13. தாவர உண்ணிகளற்றவை.
    i. Hவும் Iயும் ii. Aயும் Bயும்
    iii. Cயும் Hவும்
14. அணுங்குப்பிடி என்ற சொற்றொடருக்குப் பொருத்தமானது.
    i. D ii. H iii. A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஒரு அறைக்குள் ஆபத்தின்றி வைக்க முடியு மானவை.

i. Aயும் Cயும் ii. Gயும் Cயும்
iii. Iயும் Fவும்

16. 1 லீற்றர் 500 மில்லி லீற்றர் பானத்தை ஒவ்வொன்றும் 335 மில்லி லீற்றர் அளவான 4 குவளைகளில் இடும்போது எஞ்சியிருக்கும் அளவு யாது? .... மில்லி லீற்றர்

17. உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 12m ஆகும். பக்கம் A Bயின் நீளம் 3m 45cm உம் பக்கம் BCயின் நீளம் 5m 70cm உம் ஆகும். பக்கம் ACயின் நீளம் _ m_ cm ஆகும்.



18. பின்வரும் நிறைகளுள் கூடிய நிறை எது?

i. 4.5kg ii. 4.7kg
iii. 45010g iv. 4550g

19. பின்வரும் பின்னங்களில் மிகச் சிறிய பின்னம் எது?

i. $\frac{1}{16}$ ii. $\frac{3}{4}$ iii. $\frac{1}{2}$ iv. $\frac{1}{8}$

20. பின்வரும் நிறைகளை ஏறுவரிசைப்படுத்தினால் நடுவில் வருவது.

3420g, 4kg, 3.5kg, 4.5வg, 2kg

i. 3.5kg ii. 3420g
iii. 4kg

கழிக்குக.

21.
cm	mm
5	85
−4	90

22.
kg	g
8	70
−4	150

23. 2 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரை நான்கு குவளைகளில் சமமாக இடும்போது ஒரு குவளையில் இருக்கும் நீரின் அளவைக் காண்க. ....ml

தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையைத் தருக.

24. ஐம்பதாயிரத்து ஐம்பது என்பதை இலக்கங்களில் எழுதுக. ....

25. 4, 6, 8 எனும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண்களையும் ஏறுவரிசைப்படி எழுதினால் நடுவில் வரும் எண் யாது? ....

26. குறித்த மோட்டார் வண்டியை ஒரு லீற்றர் பெற்றோலில் 12 கிலோமீற்றர் தூரம் செலுத்தலாம். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபா 120 எனின் 30 கிலோமீற்றர் செலுத்த தேவையான பெற்றோலின் விலை ரூபா .... ஆகும்.

27. 2013ம் ஆண்டு மே மாதத்தில் கமலின் வயது 10 வருடங்களும் 9 மாதங்களும் ஆகும். அமலின் வயது 1 வருடமும் 7 மாதங்களும் ஆகும். இருவருடைய வயதுகளின் கூட்டுத் தொகையைக் காண்க. .... ஆண்டுகள் .... மாதங்கள்

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

28. வேரில் உணவு சேமிக்கும் தாவரம் எது?

i. மரவள்ளி ii. உருளைக்கிழங்கு
iii. நிலக்கடலை

29. தாங்கும் வேர்களைக் கொண்ட தாவரம்.

i. பப்பாசி ii. ஆல்
iii. சவுக்கு மரம்

30. இலகுவில் வாடாத தன்மை கொண்ட பூ.

i. ரோசாப் பூ ii. மல்லிகைப் பூ
iii. ஓர்க்கிட் பூ

31. பின்வரும் மாவட்டங்களில் மத்திய மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள ஒரு மாவட்டம் எது?

i. இரத்தினபுரி ii. கண்டி
iii. பதுளை

ஓர் ஆடியில் விம்பமாகக் காட்சி தருகையில் அதே மாதிரித் தெரியும் இரு உருக்களும் இரு எழுத்துக்களும் யாவை?

32. i.



ii.



iii.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. i. **HU** ii. **FD** iii. **XY**

வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

34. | 2 | 4 | 6 | | 1 | 3 | 5 | | 4 | 6 | 8 | ....

i. | 5 | 6 | 7 | ii. | 5 | 7 | 9 | iii. | 7 | 8 | 9 |

35. டிசம்பர், ஒக்டோபர், ஆகஸ்ட், ஜூன் ....

i. ஏப்ரல், மே ii. ஏப்ரல், பெப்ரவரி

iii. மார்ச், ஏப்ரல்

36. உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு கடதாசியை முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து இரு தாள்களினூடாகவும் துளைகளிடப்பட்டன.



அதனை முன்னர் இருந்தவாறு விரிக்கப்படும் போது காணப்படும் விதம் யாது?

i.  ii. 

iii. 

37. தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்தின் பிரகாரம் ஒரு ஒழுங்கமைப்பில் எழுதிய சரியான ஒழுங்கு முறை யாது?

i. L M N O P R S

ii. Z Y X W V U T

iii. D E F G H I J K

2 தோடம்பழங்களின் விலை ரூபா 40 ஆகும். ஒரு மாம்பழத்தின் விலை ஒரு தோடம்பழத்தின் விலையிலும் பார்க்க ரூபாய் 10 அதிகமாகும். ஒரு மாதுளம் பழத்தின் விலை ஒரு மாம்பழத்தினதும் ஒரு தோடம்பழத்தினதும் விலைகளின் மொத்த விலைக்குச் சமன் எனின்,

38. ஒரு மாம்பழத்தின் விலை ரூபாய்

i. 30 ii. 40 iii. 50

39. ஒரு மாதுளம் பழத்தின் விலை ரூபாய்

i. 40 ii. 45 iii. 50

40. தரப்பட்டுள்ள வடிவங்களில் மூன்றைச் சேர்த்து ஒரு செவ்வகத்தை அமைக்கலாம். அவ் வடிவங்கள் யாவை?



i. 1, 3, 4 ii. 1, 2, 5

iii. 5, 4, 3

41. 2013 மே மாதம் 1ம் திகதி தொழிலாளர் தினமாகும். 2013ம் ஆண்டு ஜனவரி மாதம் 01 தொடக்கம் மே மாதம் 01 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

i. 120 ii. 121

iii. 122

42. இலங்கைப் படத்தில் நிறந்தீட்டப்பட்ட பகுதி எந்த மாகாணத்தைக் குறிக்கின்றது.

i. சப்ரகமுவ மாகாணம்

ii. தென் மாகாணம்

iii. ஊவா மாகாணம்

43. அம்மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேசம் ஒன்று.

i. அம்பாந்தோட்டை

ii. பலாங்கொடை

iii. மொனராகலை

44. இது எவ்வகை இசைக் கருவியாகும்.



i. நரம்புக் கருவி

ii. துளை இசைக் கருவி

iii. கொட்டற் கருவி

45. இவ்உபகரணத்தைப் பயன்படுத்துபவர்.



i. மீன் வியாபாரி

ii. பொற்கொல்லன்

iii. கமக்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. இவ்வித்து எப்பரம்பலடையும் முறையைச் சேர்ந்தது.



i. விலங்குகளினால் பரவும் வித்து

ii. வெடித்துப் பரவும் வித்து

iii. காற்றினால் பரவும் வித்து

47. வெப்பமானியில் காணப்படும் திரவம் எது?

i. பெற்றோல் ii. நீர்
iii. இரசம்

48. உலகப் புகழ்பெற்ற மொனலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்?

i. பிக்காசோ ii. கலிலியோ
iii. லியனாடோ டாவின்சி

49. முதலாவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற இடம்.

i. கிரேக்க நாட்டில் ii. சீனாவில்

iii. இங்கிலாந்தில்

50. இவ்வுருவில் காணப்படும் தையல் முறை.



i. மீன்முள்ளுத் தையல்

ii. சங்கிலித் தையல்

iii. கம்பளித் தையல்

பின்வரும் சொற்களுக்கு கூட்டத்தைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

51. மயில் ....

52. வைக்கோல் ....

பின்வரும் ஆங்கில வசனத்திற்கான கருத்தை எழுதுக.

53. My father is a postman

54. You are a boy

பின்வரும் சிங்கள வாக்கியங்களிற்காக கருத்தை எழுதுக.

55. இர பாயனவா ....

56. பரவியா இகிலனவா ....

பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கு படுத்துக.

57. சுகம் - பேணினால் - சுத்தம் - அனுபவிக்கலாம்

....

58. வாடிய - வறுமையில் - நின்றனர் - மக்கள் - வேண்டி - வாழ்வாதாரம்

....

"நான் பாதையில் கண்டெடுத்த பொதி" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம். எழுவாய், பயனிலை பேணப்படுதல் அவசியம்.

விடைகள்

1. ii
2. iii
3. i
4. iii
5. iii
6. i
7. நாய்
8. உத்தமி
9. வழிகாட்டிச் செல்கிறாள்
10. மாதங்கள்
11. iii
12. i
13. ii
14. i
15. ii
16. 160ml
17. 9m 85cm
18. ii
19. iv
20. i
21. 5mm
22. 3kg 920g
23. 625ml
24. 150 050
25. 648
26. ரூபா 300
27. 22 ஆண்டுகள் 4 மாதங்கள்
28. i
29. ii
30. iii
31. ii
32. i
33. i
34. ii
35. ii
36. ii
37. ii
38. i
39. iii
40. iii
41. iii
42. iii
43. iii
44. ii
45. iii
46. iii
47. iii
48. iii
49. i
50. ii
51. குழாம்
52. கற்றை
53. சூரியன் உதிக்கின்றது.
54. புறா பறக்கிறது
55. என்றுடைய அப்பா ஒரு தபாற்காரர்
56. நீ ஒரு பையன்
57. சுத்தம் பேணினால் சுகம் அனுபவிக்கலாம்
58. வறுமையில் வாடிய மக்கள் வாழ்வாதாரம் வேண்டி நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச எழுத்தறிவு தினம்

சர்வதேச எழுத்தறிவு தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் 8ஆம் திகதி சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அடிப்படை எழுத்தறிவை கற்றுக் கொள்வதன் அவசியம் பற்றி மக்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.

வரலாறு

- 1965ஆம் ஆண்டு செப்டம்பர் 08ஆம் திகதி ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் உலகளாவிய கல்வி அமைச்சர்கள் மாநாடு இடம்பெற்றது. இம்மாநாட்டில் எழுத்தறிவின்மையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு பல முக்கிய தீர்மானங்கள் பெறப்பட்டன.
- இதனடிப்படையில் 1965இல் ஐக்கிய நாடுகள் சபையில் யுனேஸ்கோ அமைப்பு செப்டம்பர் 08ஆம் திகதியை சர்வதேச எழுத்தறிவு தினமாக பிரகடனம் செய்தது.
- 1966ஆம் ஆண்டு முதலாவது சர்வதேச எழுத்தறிவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

எழுத்தறிவின்மை:

"எந்த மொழியிலும் இலகுவான வசனங்களை எழுதவும், படிக்கவும் தெரியாமையே எழுத்தறிவின்மையாகும்."

- உலகில் சுமார் 780 மில்லியனுக்கும் அதிகமான வயது வந்தோர் அடிப்படை எழுத்தறிவின்றி வாழ்கின்றனர். அதாவது, உலகில் 5 பேரில் ஒருவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது.
- இதில் 2/3 மடங்கு பெண்களாவர்.
- உலகில் சுமார் 103 மில்லியன் சிறார்கள் பாடசாலை வசதிகள் அற்ற நிலையில் உள்ளனர்.

இலங்கையில் எழுத்தறிவு:

PUBLIC LIBRARY
JAFFNA

- தென்னாசியாவில் உயர்ந்த எழுத்தறிவு கொண்ட நாடாக இலங்கை கருதப்படுகின்றது.
- இலங்கையில் கட்டாயம் கல்வி பெறவேண்டிய வயதாக 5-14 வயது கருதப்படுகின்றது.
- இலங்கை யுனெஸ்கோவின் கல்விசார் அபிவிருத்தித் திட்டங்களில் 1949 நவம்பர் 14ஆம் திகதி இணைந்து கொண்டது.
- 2010ஆம் ஆண்டு கணிப்பீட்டின் படி இலங்கையில் எழுத்தறிவு 91.2 சதவீதமாகும் (ஆண்கள் - 92.6%, பெண்கள் 90%)
- கணினி எழுத்தறிவு வீதம் இங்கு 35%ஆகும். இவ் எழுத்தறிவில் எமது நாடு உலகில் 66வது இடத்தில் உள்ளது.

எழுத்தறிவு தொடர்பாக அறிஞர்களின் கூற்று:



"எழுத்தறிவின்மை என்பது ஒரு குற்றம், பாவம். இதை நாட்டை விட்டு அகற்ற வேண்டும்."
(மகாத்மா காந்தி)

"எழுத்தறிவு நிலைபேர் அபிவிருத்தியின் இதயமாகும்."
(கொபி அனான்)

"எழுதுவதும், படிப்பதும் மட்டுமே எழுத்தறிவு பெற்றதாகி விடாது. வாய்ப்புகளைக் கண்டறிவதுடன் வளர்ச்சியை மையமாகக் கொண்டதாகவும் அந்தக் கல்வியறிவு இருக்க வேண்டும்."
(பான் கீ மூன்)

facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 5 மாணவர்களின் வெற்றியின் இரகசியம்

நந்தவனம்

Rs:320.00

ஆசிரியர் ஏ.எஸ். ஜௌபர்

எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய
மாதிரி வினாத்தாள்கள் 24
(விடைகளுடன்)

ஏனைய வெளியீடுகள்...



Rs: 220.00

Rs: 300.00

Rs: 300.00

Rs: 450.00



Rs: 150.00



Rs: 300.00

Rs: 125.00



Rs: 300.00

Rs: 180.00

Rs: 350.00

Rs: 250.00

Rs: 265.00

இஸ்லாமிக் புக் ஹவுஸ்

77, Dematagoda Road, Colombo 09.

Tel: 0112684851, Fax: 0112688102 Web: www.ibh.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org